Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/724)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 29 ஞாயிற்றுக்கிழமை (12.06.2011) பக்கங்கள் 16 ஓசை – 256





02



தமிழ் மொழி பயிலும் எம்.பி.க்கள்

09



கடவுள்தானா காப்பாற்ற வேண்டும்?

12



கனடா நாடாளுமன்றில் தமிழில் உரை

15

# நாடு திரும்புமுன் தூதுக்குழு அமைச்சர் டக்ளசுடன் பேச்சு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் தலைமையிலான குழுவினருடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொலைபேசி மூலம் கலந்துரையாடினார்.

தங்களது நெருக்கடியான பயண நிகழ்ச்சி நிரலில் யாழ்ப்பாணம் வரமுடியாமலிருப்பதற்கான வருத்தத்தைத் தூதுக்குழுவினர் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

அவசர பணிகள் காரணமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸை தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட தூதுர் குழுவினரிடம், இனப்பிரச்சினைத் தீர்வில் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றி அமைச்சர் கலந்துரையாடினார்.


ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உட்பட சகல தரப்பினரையும் தீர்வுத் திட்ட நடைமுறைகளுக்குள் உட்படுத்தும் விதத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் கூறினார். அமைக்கப்படும் தெரிவுக் குழு, அதன் முடிவைக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் தெரியப்படுத்தவேண்டும் என்றும் குறிப்பிட்ட அமைச்சர் வரும் 23 ஆம் திகதி ஜனாதிபதிக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கும் இடையில் நடைபெறவுள்ள தீர்வுப் பேச்சுவார்த்தையின்போது இந்த யோசனையை முன்வைக்க விருப்பதாகவும் தெரிவித்தார்.

அதனை ஆமோதித்த இந்தியத் தூதுக்குழுவினர், தடைகளற்ற வகையில் தீர்வினை உருவாக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழுத்திட்டம் பரிசீலிக்கத் தகுந்தததது எனக் கருத்து வெளியிட்டனர்.

கடற்தொழிலாளர்களது பிரச்சினை தொடர்பில் திட்டமொன்று வகுக்கப்பட்டிருப்பதாகத் தூதுக்குழுவினர் தெரிவித்தவேளை, அத்திட்டம் குறித்து ஆராய்ந்து பார்க்க இயலுமெனக் கூறிய அமைச்சர் டக்ளஸ், கடந்தகாலப் போர்ச்சூழலால் தொழில் பாதிப்புக்குள்ளான எமது மீனவர்களின் தொழில் வாய்ப்புக்கு முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழான 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர், அதை விரைவில் முடித்துக்கொடுக்க ஆவன செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அது பற்றிய விபரங்களை இந்தியத் தூதுவர் அமைச்சர் டக்ளசிடம் வெகுவிரைவில் கலந்து பேசப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தூதுக குழுவினர் தெரிவித்தனர்.

தூதுக்குழுவினர் நேற்று மாலை இந்தியா திரும்பினார்.







## நிலைத்திருக்கும் அரசியல் தீர்வு; கூட்டமைப்பின் பிந்திய கோரிக்கை

### இந்தியக்குழுவுடன் பேச்சு

(கிளிநொச்சி)

இலங்கை வந்திருந்த இந்திய உயர்மட்டத் தூதுக்குழுவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் நேற்றுக் காலை 10.30 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை ஒன்றரை மணிநேர சந்திப்பு நடைபெற்றுள்ளது. நிலையத்திருக்கூடிய அரசியல் தீர்வை எட்டுவது எவ்வாறு என்பது குறித்து இருதரப்பும் ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது. இந்த சந்திப்பானது இந்திய தூதுவருடை இல்லத்தில் இடம்பெற்றதாக

(15ஆம் பக்கம் பார்க்க)

## சிறிதரன், சித்தார்த்தன், சங்கரி தூதுக்குழுவை தனியே சந்தித்தனர்

(கிளிநொச்சி)

இலங்கை வந்திருந்த இந்தியத் தூதுக்குழுவினருடன் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்மநாபா) தலைவர் சிறிதரன் ஆகிய மூவரும் தனியே சென்று சந்தித்துப் பேசியுள்ளனர்.

அதிகாரப் பகிர்வைத் துரிதப்படுவதற்கு இலங்கை அரசை வலியுறுத்தவேண்டும் என்றும், சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீட்டை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் எனவும் தூதுக் குழுவினருடனான பேச்சு வார்த்தையின்போது கேட்டுக்கொண்டனர்.

சித்தார்த்தன், சங்கரி, சிறிதரன் ஆகியோர் நேற்றுக் காலை 11 மணியளவில் தூதுக்குழுவைச் சந்தித்து உரையாடினர். இந்தியா வழங்குவதாகக் கூடியிருந்த 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தின் அவசரத் தேவை குறித்தும், வடக்கு கிழக்கிலுள்ள தனியார் நிலங்களை அரசு தனது திட்டங்களினடிப்படையில் சுவீகரித்து வருவதை நிறுத்தவேண்டும எனவும் இதன்போது இந்தியக் குழுவிடம் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

## யாழ்.சிறையில் இந்திய மீனவர்கள் விடுதலை செய்ய ஜெயலலிதா கோரிக்கை

### உறவை வலுப்படுத்த அது உதவுமாம்



(கொழும்பு)

இலங்கையில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய இலங்கை அரசு நடவடிக்கை எடுப்பதன் ஊடாக இந்தியாவுடனான சுமுகமான உறவை மேம்படுத்த முடியும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார் என்று த இந்து நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

முதல்வர் ஜெயலலிதா சட்ட சபையில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவிததுள்ளார் என்று த இந்து நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக முதல்வர் பேசியவை தொடர்பாக மேற்படி நாளிதழில் விடுத்துள்ள செய்தியில மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை இலங்கை அரசு விடுவித்தால் தமிழ் நாடு அரசு மற்றும் மீனவர்கள் அது குறித்து நன்றியுடையவர்களாக இருப்பார்கள் எனவும அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் நால்வரையும் உடனடியாக விடுவிக்க தலையீடு செய்யுமாறு முதல்வர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வேண்டுகோள விடுத்துள்ளார்.

கடந்த 2 ஆம் திகதி பலத்த காற்றில் சிக்கி குறித்த மீனவர்கள் பயணித்த படகு விபத்துக்குள்ளானதால், அவர்கள் இலங்கையின் நயினாதீவு நோக்கி நீந்தி வந்தனர். இதனையடுத்து இலங்கையின் பாதுகாப்புத் தரப்பினர் நான்கு மீனவர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த

(15ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமர் கொழும்பு வருவார்

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மிகவிரைவில் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவிருக்கிறார்.

கொழும்பு வந்து திரும்பியுள்ள இந்திய உயர்மட்டத் தூதுக்குழு பிரதமர் மன்மோகன் சிங்கின் விசேட செய்தி அடங்கிய கடிதம் ஒன்றை நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தது. இது இந்தியப் பிரதமரின் கொழும்பு வருகைக்கான முன் ஏற்பாடாகவே இருக்கும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சந்திர கிரகணம்

(கொழும்பு)

இந்த வருடத்தில் இடம் பெறும் முதல் சந்திர கிரகணம் எதிர்வரும் 15 ஆம் திகதி இடம் பெறவுள்ளதாக கோள் அவதான நிலையத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பிரியங்க கோரலகே தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் அன்றையதினம் நடுநிசி 12.52 இற்கு சந்திரகிரகணம் ஆரம்பமாகும்.

# அச்சுவேலியில் 'சதொச' நிலையம் அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்



(யாழ்ப்பாணம்)

யாழ் அச்சுவேலி பகுதியில் புதிதாக அமையப்பெற்றுள்ள சதொச விற்பனை நிலையத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்துள்ளார். அத்துடன், அதன் விற்பனை நடவடிக்கைகளையும் சம்பிரதாயபூர்வமாகத் ஆரம்பித்து வைத்தார்.

மக்கள் தமக்குத் தேவையான பல்வேறு பொருட்களையும் இலகுவில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளும் விதமாக நாடளாவிய ரீதியில் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் சதொச விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன் பிரகாரம் நாடளாவிய ரீதியில் 240 ஆவது சதொச விற்பனை நிலையம் நேற்று அச்சுவே லியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நாடாவை வெட்டி நிலையத்தை திறந்து வைத்ததுடன் மங்கல விளக்கினையும் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து விற்பனை நிலையத்தைப் பார்வையிட்ட அமைச்சர் அவர்கள் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை நடவடிக்கைகளையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன் மற்றும் கோப்பாய் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பாஷையூர் புனித அந்தோனியாரின் வருடாந்த தேர்ப்பவனி நாளை



(கொழும்புத்துறை)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த தேர்ப் பவனி நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அன்றைய தினம் காலை 5.00 மணிக்கு முதலாம் திருவிழாத் திருப்பலி பூஜைகள் யாழ்.ஆயர் வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெறும். பாஷையூர் அந்தோனியார் ஆலய வருடாந்த தேர்ப் பவனி அன்று யாழ்.மாநகராட்சி மன்றம் சுகாதார மற்றும் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான சகல முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது.

# வல்லை இந்து மயானம் புனரமைப்பு எப்போது?

(புத்தூர்)

வலி.கிழக்கு பிரதேசசபை நிர்வாகப் பகுதியிலுள்ள வல்லை இந்து மயானம் பல வருடங்களாக திருத்தப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதால், அச்சுவேலி மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர். தகனக் கிரியைக்காக இந்து மயானத்துக்கு செல்லும் பாதை திருத்தப்படாமல் அலங்கோலமான முறையில் இருப்பதால், தகனக்கிரியைகளுக்குச் செல்வோர் பல சிரமங்கள் மத்தியில் இறந்தவர்களின் பூதவுடல்களைக் கொண்டு சென்று மயானத்தில் தகனக் கிரியைகள் செய்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

மழை காலத்திலும், மயான வளாகத்தில் மழைவெள்ளம் புகுவதால் இறந்தவர்களின் உடல்களை எரிக்க முடியாத நிலையும், மயானத்தில் உள்ள கிணறும் பல வருடங்களாக இறைக்காதிருப்பதையும் காண முடிகிறது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து இக்குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர். (08)

## திருமுறை முற்றோதல்

அகில இலங்கை திருமுறைக் கழகமும், காரைநகரில் உள்ள அடியார்களும் இணைந்து ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் திருமுறை முற்றோதல் பாராயணம் செய்து வருகின்றனர்.

கடந்த மாதம் 29 ஆம் திகதி மேற்படி ஆலயத்தில் கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் தொடங்கப்பட்ட திருமுறை ஓதும் நிகழ்வு தினசரி நடைபெற்று வருகிறது.

சேக்கிழார் குருபூசைத் தினமான கும்பாபிஷேக தினத்தன்று திருமுறை ஏடுகள் வலம்வந்து பண்டிதர் பொன்னம்பலவாணர் தலைமையில் திருமுறை ஓதும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. (10)

# சமாதான நீதவான்கள் சங்கம் மீண்டும் புனரமைக்கப்படுமா?

(புத்தூர்)

கடந்த பத்து வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்ட யாழ். மாவட்ட சமாதான நீதவான்கள் சங்கம் மீண்டும் புனரமைக்கப்படுமா என யாழ்.மாவட்டத்திலுள்ள சமாதான நீதவான்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர்.

இச்சங்கம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து எந்தவொரு பொதுக்கூட்டமோ, நிர்வாகக் கூட்டமோ நடைபெறவில்லை என்பதால், சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கவனமெடுத்து மீண்டும் சங்கத்தை புனரமைத்துச் செயற்பட ஆவண செய்ய வேண்டுமென சமாதான நீதவான்கள் பலரும் எதிர்பார்க்கின்றனர். (08)

## அறிவுசார் கண்காட்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொது நூலகத்தின் ஒழுங்குபடுத்தலில் நூலக விழிப்புணர்பு நிறுவகம் வழங்கும் பன்முகத்தகவல் அறிவுவிருத்திக்கான அறிவுசார் கண்காட்சி நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மட்டுவில் கமலாசினி வித்தியாலய மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சரசாலை பொது நூலக நூலகர் இ.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் செல்வி சி.தர்சினி, நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் செயலாளர் க.தனபாலசிங்கம், கமலாசினி வித்தியாலய அதிபர் பேரின்பநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (11)

## மலசல கூடம் புனரமைப்பு

(யாழ்.நிருபர்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் மலசல கூடங்கள் மாபிள் பதித்துப் புனரமைக்கப்படும் பணி நடைபெற்று வருகிறது.

கனடாவைச் சேர்ந்த பழைய மாணவர்களால் சுமார் நான்கு இலட்சம் ரூபா செலவில் இவ் வேலைகள் நடைபெற்று வருவதாக அதிபர் சு.சண்முககுமார் தெரிவித்தார். (10)

## விஞ்ஞான பாட மாணவர்களுக்கு மதிப்பீட்டுப் பரீட்சைகள் ஆரம்பம்

(பூநகரி)

க.பொ.த உயர்தரத்தில் புதிய பாடத்திட்டத்திற்கமைவாக விஞ்ஞானப் பிரிவில் தோற்றும் மாணவர்களுக்கான மாகாண மட்டத்திலான மதிப்பீட்டுப் பரீட்சைகள் புதிய வினாத்தாளின் மாதிரிக்கமைவாக கடந்த 7ஆம் திகதி வடமாகாணப் பாடசாலைகளில் ஆரம்பமாகி நடைபெறுவதாக கிளிநொச்சி வலயக் கல்வி அபிவிருத்திக்குரிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.

இப்பரீட்சை தொடர்ந்து 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. 13ஆம் திகதி காலை பௌதீகவியல் பகுதி II ம், 14ஆம் திகதி காலை பௌதீகவியல் பகுதி I ம், 16ஆம் திகதி காலை இரசாயனவியல் பகுதி IIம், 17 ஆம் திகதி காலை இரசாயனவியல் பகுதி I ம், நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (112)

# வேலணை சோளாவத்தைக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும்

(வேலணை)

வேலணை பிரதேசத்திலுள்ள சோளாவத்தை கிராமத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால், தாம் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வது பெரும் சிரமமாக உள்ளதாகவும் குறிப்பாக மாணவர்கள் இரவு வேளைகளில் சிரமத்தின் மத்தியில் கல்வியைக் கற்பதாகவும் அப்பிரதேச மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தொடர்பாக மின்சார சபைக்கு பலமுறை கோரியும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களுடைய கல்வி மற்றும் தேவைகளைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் கிராமத்திற்கான மின்சார விநியோகத்தை விரைவாக பெற்றுத்தர ஆவன செய்யுமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (32)

# கொழும்புத்துறையில் வீதிகள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் உள்ள குறுக்கு வீதிகளை யாழ்.மாநகராட்சி மன்றம் புனர்நிர்மானம் செய்யவுள்ளது.

தற்போது முதற்கட்டமாக கடற்கரை வீதியோரப் பக்கமாக சேதமடைந்த வீதிகளைத் தொழிலாளர்கள் துப்புரவு செய்து வருகின்றனர். இதற்கென 50 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். (வி)



: யாழ்.பிறவுண் வீதி, 'எவர்சைன் கிட்ஸ் வோல்ட்' முன்பள்ளிச் சிறார்களின் ஆறாவது வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் யாழ்.இந்து சிறுவர் பாடசாலையில் நடைபெற்றபோது தண்ணீர் நிரப்பும் காட்சியைக் காணலாம். (படம் : குருநகர் - 68)

# மோட்டார் சைக்கிள் திருட்டு நெல்லியடியில் துணிகரம்

(கரணவாய்)

நெல்லியடியில் உள்ள சம்பத் வங்கிக் கிளையில் நகையை அடைவு வைப்பதற்கு உள்ளே சென்று திரும்பிய பெண் குறித்த வங்கியின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது 49 சி.சி மோட்டார் சைக்கிளை காணாது அதிர்ச்சியடைந்த சம்பவம் ஒன்று நேற்று முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

நெல்லியடி கலிகைச் சந்தியைச் சேர்ந்த சுபாஜினி என்பவரது 49 சி.சி ரக மோட்டார் சைக்கிளே மேற்படி காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து, குறித்த பெண் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து அவ்விடத்தைப் பார்வையிட்டதுடன், தேடுதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (18)


## திருநாள் திருப்பலி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் திருப்பலி நாளை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. தொடர்ந்து புனிதரின் தேர்ப்பவனியும், ஆசீரும் இடம்பெறவுள்ளது. (27)

# யானைகளின் தொல்லை முள்ளியவளையில் தாராளம்

(முல்லைத்தீவு)



ஒட்டுசுட்டானிலிருந்து முள்ளியவளைக்குச் செல்லும் பகுதியில் அமைந்துள்ள வெள்ளமலைக் கிராமத்தில் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமத்திலுள்ள மக்கள் அதிகாலை வேளைகளில் இப்பகுதியூடாக பயத்துடனும், அச்சத்துடனும் செல்லவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதைவிட அண்மையில் இப்பகுதியூடாக அதிகாலை வேளை சென்ற ஒருவர் யானையின் சத்தம் கேட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தவேளை விழுந்து காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (40)

நல்லவராக அனைவரும், விரும்புவதால் எதிர்காலத்தை நோக்கிக் கார்த்திருக்கின்றனர் பசித்தவன் இப்போதே சாப்பிடவிரும்புவது போல கடவுள் அருள்கிடைக்க இதுவே சரியான நேரம் என்பதால் முழுமனதுடன் முயற்சிக்கவேண்டும்.

- தாயுமானவர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பின்னால் தொடரும் கரிய நிழல்!

தான் வாழுகின்ற சூழலை வாழ முடியாத இடமாக மாற்றிக் கொண்டிருக்கும் ஒரே விலங்கு மனிதன்தான்!

உண்ணும் உணவில் நஞ்சைக் கலந்து கொண்டிருக்கிறோம்; சுவாசிக்கும் காற்றில் நஞ்சைக் கலந்து கொண்டிருக்கிறோம்; ஒசோன் படலத்தில் பொத்தல் போட்டுக் கொண்டிருக்கிறோம்; காடுகளை அழித்துக் கொண்டிருக்கிறோம்; நிலம் கூட மூச்சுவிட முடியாமல் சீமெந்தையும் தாரையும் போட்டு மூடிக்கொண்டிருக்கிறோம்.

செயற்கை உரத்திலுள்ள இரசாயனப் பொருட்கள் நச்சுத் தன்மையானவை. அதை அளவு கணக்கின்றியும், முறை தெரியாமலும் அள்ளிக் கொட்டிக் கொண்டிருக்கிறோம். விசிறும் கிருமிநாசினி மருந்துகளாலும் காய்கறிகள், தானியங்களில் நஞ்சைச் சேர்க்கிறோம்.

பச்சை இலை மரங்களாலான வனங்களை அழித்து கொங்கிரீட் வனங்களை உருவாக்கி வருகிறோம். தொழிற்சாலைகளின் இரசாயனக் கழிவுகள் ஆறுகள் குளங்களிலெல்லாம் கலக்கின்றன. காபன் புகை காற்று மண்டலத்தில் கலக்கிறது.

குளிர்பானத் தொழிற்சாலைகளும் ஏனைய பல தொழிற்சாலைகளும் நிலத்தடி நீரை உறிஞ்சி நிலத்தை வரள வைக்கின்றன. குளிரூட்டிகள், குளிர்சாதனங்களில் எல்லாம் பயன்படுத்தப்படும் குளோரோ ஃபுளோரோ காபன் வாயுவினால் ஒசோன் திரையைக் கிழிக்கிறோம். இந்தத் திரை கிழிக்கப்பட்ட பிறகு சூரியக் கதிர்கள் வடிகட்டப்படாமல் கீழே வருகிறது. வெப்பம் அதிகமாகிறது; தோலில் புற்றுநோய்க்கும் காரணமாகிறது.

வாய் பிளந்து நம்மை நெருங்கி வரும் இந்த சூழல் மாசென்னும் பூதத்தை நாமே வளர்த்துப் பயங்கரமாக்கி விட்டிருக்கிறோம். இது தெரிந்தாலும் நம்மால் பின்வாங்க முடியாது.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் வளர்ச்சியும்[?] நம்மை அடிமைகொண்டு விட்டன. பயந்தாலும், விலக விரும்பினாலும் இதிலிருந்து நம்மால் தப்ப முடியாது. மாசு குறைந்த பழைய வாழ்க்கைக்குத் திரும்ப முடியாது. இனி அது நமக்கு ஏக்கக் கற்பனையே!

நாம் எந்த நோக்கங்களுக்காகக் கருவிகளையும் இயந்திரங்களையும் தொழிற்சாலைகளையும் உருவாக்குகின்றோமோ அவற்றுக்கு நேர்மாறான விளைவுகள் ஏற்பட்டு அவற்றால் பாதிக்கப்படுகிறோம். அவற்றை விட்டுவிட முடியாமல் அடிபணிகிறோம்.

மனிதனின் இன்னும் இன்னும் என முன்னே செல்லும் ஆசை, அவனைத் திரும்பிப் பார்க்கவோ நிதானிக்கவோ விடாது. மேலும் கண்டுபிடிப்புகள் மேலும் வளர்ச்சி என ஆவேசமுடன் முன்னேறும் மனிதனுக்கு, அதன் எதிர்விளைவுகளுக்காகத் தயங்கி நிற்கக் கூட நேரமில்லை.

இன்றைய நம் ஒவ்வொரு செயலும் மற்றவர்களை மட்டுமல்ல நம்மையுமே தான் பாதிக்கிறது. விவசாய நிலத்திற்கும் வேறு தேவைகளுக்குமென ஒவ்வொரு விவசாயியும் மரங்களை வெட்டித் தள்ளுகிறான். தான் தறிப்பது சில தனி மரங்களையே என்று நினைத்துக் கொள்கிறான். ஆனால், கடைசியில் காடுகள் அழிகின்றன. வெள்ளமும் மண்ணரிப்பும் ஏற்பட்டு எல்லா விவசாயிகளுமேதான் பாதிக்கப்படுகிறார்கள். மரங்கள் இல்லாமல் போவதால் உயிர்வாயுவான ஒட்சிசனையும் இழக்கிறோம்.

வாகனப் புகையை, தொழிற்சாலைக் கழிவை, வானுயர் கட்டடங்களை, இரசாயன உரத்தை, கிருமிநாசினியை இன்னுமின்னும் நம்மை விரைவுபடுத்தும் சொகுசு படுத்தும் சாதனங்களை நாம் விடப் போவதில்லை. குறைந்த இடத்தில் நிறைந்த விளைச்சலுக்காக மரபணு மாற்றி விதைகளைப் பயன்படுத்துவோமே தவிர, இயற்கை உரத்தோடு பயிர் செய்யும் முறைக்குத் திரும்பப் போவதில்லை. அதுபோல புகையே அற்ற மாட்டுவண்டிப் பயணத்திற்கும் நாம் இனித் தயாரில்லை.

சூழலை மாசுபடுத்துவதற்காக நாம் ஒவ்வொருவரும் செய்து கொண்டிருக்கும் பங்களிப்பை உணர்ந்து கொள்வதன் மூலம் முடிந்தவரை அவற்றைத் தவிர்க்கவோ குறைக்கவோ முயற்சி செய்யலாம். சூழல் மாசு நமது வாழ்நாளை மட்டுமல்ல பூமியின் வாழ்நாளையே குறைத்துக்கொண்டிருக்கிறது என்ற உணர்வு, நமது ஒவ்வொரு முன் அடிவைப்பிலும் இருக்க வேண்டும்.

- ஆசிரியர்

# வவு. வில் கூட்டுறவு மத்திய நிலையத்தை ஆளுநர் சந்திரசிறி திறந்து வைத்தார்

## - கூட்டுறவு ஆணையாளரிடம் 40 மில்லியன் ரூபா கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் தமக்குத் தேவைப்படும் அத்தியாவசிய உணவுப்பொருட்களை மொத்தமாக வவுனியாவில் கொள்முதல் செய்ய கூட்டுறவு மத்திய நிலையம் திறக்கப்பட்டுள்ளது

வவுனியா புகையிரதநிலைய வீதியில் அரச உணவுக்களஞ்சிய நிலையத்தில் அமைந்துள்ள இந்த நிலையத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வைபவரீதியாக நேற்றுக் காலை திறந்துவைத்தார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டத்தில் 47 கூட்டுறவுச் சங்கக் கிளைகள் உள்ளன இவை அனைத்தும் மேற்படி நிலையத்தில் மொத்த விலையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்

மகிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு அமைச்சினால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொருட்களை கொள்முதல் செய்ய கூட்டுறவு அமைச்சு வடமாகாண கூட்டுறவுத்திணைக்களத்திற்கு 40 மில்லியன் ரூபாவினை வட்டி இன்றி கடனாக வழங்கியுள்ளது என வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் கூட்டுறவுச்சங்கங்கள் அத்தியாவசியப் பொருட்களை தனியார் வர்த்தக நிலையங்களிலும் கொழும்பிலும் கொள்முதல் செய்துவந்தன. புதிய திட்டத்தின் கீழ் பலதரப்பட்ட இலாபம் ஏற்படுகின்றது என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வைபவத்தில் வவுனியா கூட்டுறவுச் சபைத் தலைவர் சுப்பிரமணியம் ஆளுநருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

## சைவநெறித்தேர்வுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ் நிருபர்)

சைவபரிபாலன சபையினரால் அகில இலங்கை சைவநெறித்தேர்வு 2011க்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம் 2 இல் இருந்து தரம் 12 வரையான வகுப்புகளுக்கு சைவநெறி, தமிழ்மொழி ஆகிய பாடங்களுக்கு பாடசாலை மாணவர்கள் தோற்றமுடியும். தரம் 2-5 வரை ஒரு பாடத்துக்கான கட்டணம் 15ரூபாவும் தரம் 6,7,8க்கான பரீட்சைக்கட்டணம் ஒரு பாடத்துக்கு 25 ரூபாவும், தரம் 9,10,11க்குரிய பரீட்சைக்கட்டணம் ஒரு பாடத்துக்கு 30 ரூபாவும், தரம் 12 இந்துநாகரிகம் இந்துசமயம், தமிழ்மொழி ஆகிய பாடங்களில் ஒரு பாடத்துக்கு பரீட்சைக் கட்டணம் 50 ரூபாவும் செலுத்த வேண்டும்

பாடசாலைகளுக்கு விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், விண்ணப்பப்படிவம் கிடைக்கப் பெறாதவர்கள் தேர்வுச் செயலாளர், சைவபரிபாலனசபை, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் விண்ணப்ப முடிவுத்திகதி 30.06.2011 என்றும் தேர்வுச் செயலாளர் பொ. கமலநாதன் தெரிவித்துள்ளார். (10)

## புத்தூர் – மட்டுவில் வீதி புனரமைக்கக் கோரிக்கை

புத்தூர் - மட்டுவில் வீதி நீண்டகாலமாக எவ்வித புனரமைப்பு நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படாது கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதால் இப்பாதையால் பயணம் செய்யும் பாதசாரிகள் மற்றும் பயணிகள் பெரும் இன்னல்களை அனுபவித்த வண்ணம் பயணம் செய்ய வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதியில் கனரக வாகனங்கள் மற்றும் சிற்றூர்திகள் செல்லமுடியாத அளவிற்கு பாரிய பல குழிகள் எங்கும் நிறைந்து காணப்படுவதால் பயணம் செய்யும் வாகனங்கள் அடிக்கடி பழுதடைவதாகவும் வாகன உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேலும் மழை காலங்களில் மழை நீர் குழிகளில் தேங்கி நிற்கும்போது அவ்வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பாதசாரிகள் மேலும் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்த வண்ணமே பயணிக்க வேண்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (03)

## உதவித்திட்டப் பணிப்பாளர் நியமனம்

(காரைநகர்)

காரைநகர் உதவிஅரசாங்க அதிபர் பணிமனைக்கு உதவித்திட்டப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தனியாக உருவாக்கப்பட்டதிலிருந்து இப்பதவிக்கு ஒருவர் நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

2009முதல் அபிவிருத்தி உத்தியோகத்தரே அபிவிருத்திப் பணிகளை ஒருங்கிணைத்துவந்தார். இவ் ஆண்டு பல வேலைத் திட்டங்கள் ஆரம்பித்துள்ள பொருத்தமான நேரத்தில் இவ் உத்தி யோகத்தர் நியமனம் பெற்றிருப்பது பேருதவியாக அமைந்துள்ளது என காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.வி.ஜெயசீலன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலக திட்டமிடற் கிளையில் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளராக பணியாற்றிய செல்வி. ரட்ணேஸ்வரி அவர்களே இவ்வாறு நியமிக்கப்பட்டவராவார். (86)

## கூட்டுறவு அபிவிருத்தி; இரண்டுநாள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பான இரண்டு நாள் பயிற்சி வகுப்பொன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

சுவீடன் நாட்டு நிதி உதவியில் நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வதற்கென யாழ். மாவட்டத்தில் இருந்து 10 கூட்டுறவு நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டு அந் நிறுவனங்களின் முகாமை மட்டப்பணியாளர் அழைக்கப்பட்டுள்ளனர். இப்பயிற்சியை வழங்குவதற்கென கொழும்பில் இருந்து திட்ட இணைப்பாளர் குமார பொட்டுவில வியாபார முகாமைத்துவ அபிவிருத்தி இணைப்பாளர் சமிந்த டிசில்வாகலாம் ஆகியோர் வருகை தரவுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்வதற்கென சாவகச்சேரி, மானிப்பாய், புங்குடுதீவு, புலோலி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களும், யாழ். மாவட்ட சிக்கனகடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், காரைநகர், அச்சுவேலி, கரவெட்டி, ஆகிய பனைதென்னைவள அபிவிருத் திக்கூட்டுறவுச் சங்கங்களும், தென்மராட்சிக் கொத்தணி ஆகிய சங்கங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## சென்னை செல்லும் 25 கூட்டுறவாளர்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கூட்டுறவுசபையின் அனுசரனையுடன் 25 கூட்டுறவாளர்கள் சென்னைக்கான கல்விச்சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு நேற்று சென்னை பயணமானார்கள். தேசிய கூட்டுறவு சபையில் அங்கம் வகிக்கும் மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர்கள் தலைவர்கள், ஆகியோரே இக்கல்விச்சுற்றுலாவில் இடம்பெற்றுள்ளனர்.

மூன்று நாட்கள் இடம்பெறவுள்ள கல்விச் சுற்றுலாவின் போது இந்தியாவில் கூட்டுறவுத்துறையில் முன்னேற்றம் கண்டுள்ள இடங்களுக்கும், மற்றும் வரலாற்றுப் பெருமைவாய்ந்த இடங்களுக்கும் இவர்கள் சென்று கூட்டுறவு தொடர்பான அபிவிருத்திகள் ச்ம்பந்தமாக அறிந்து கொள்ளவுள்ளனர்.

கல்விச்சுற்றுலாவை மேற்கொள்ளும் 25 கூட்டுறவாளர்களில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து ஒரு பெண் உட்பட மூன்றுபேர் அடங்குகின்றனர்.

# குடாநாட்டு பிரதான வீதிகளின் புனரமைப்பு வேலைகள் துரித கதியில்

(நல்லூர்)

யாழ். குடாநாட்டில் உள்ள பிரதான வீதிகளைத் துரித கதியில் புனர்நிர்மாணம் செய்வதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனாதிபதியின் யாழ். விஜயத்தை முன்னிட்டும், குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளில் வீதிப் புனரமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை வீதி, பிரதான வீதி போன்ற நெடுஞ்சாலைகளை விரைவாகப் புனர்நிர்மாணம் செய்யுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்திற்குப் பெரிதும் சிரமமாக காணப்படும் இந்த நெடுஞ்சாலைகள் துரித வேகத்தில் புனரமைக்கும் பணிகள் இந்த வாரத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

அதேசமயம் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மீள் எழுச்சித் திட்ட அமைச்சின் கீழும் வீதிகள் சில புனரமைப்புக்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.


குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் வீதிப் புனரமைப்புக்கு தற்போது முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. (வி)

## உதவி அரச அதிபர் நியமனம்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு புதிய உதவி அரசாங்க அதிபராக சி. ஜெயகாந் நியமிக்கப்பட்டுள்ளார். மாந்தை கிழக்கு மற்றும் கரைதுரைப்பற்று ஆகிய பகுதிகளில் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் இவர் நான்கரை வருடங்களுக்கு மேலாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (110)

## லண்டன் பயணம்

லண்டன் நகரிலுள்ள முருகன் ஆலய மகாகும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொள்ளுவதற்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் கடந்த வாரம் லண்டனுக்குச் சென்றுள்ளார்.




யாழ். ஜெயப்பூர் நிறுவனத்தில் நடைபெற்ற காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பொதுச் சுகாதார பரிசோதகர்களான அ. பகீரதரன், ஜே. பேடினன்ஸ், சீ.பி. கிஷோக்குமார் ஆகியோர் பங்குகொண்டு கருத்துரை வழங்குவதையும், கருத்தரங்கில் பங்குபற்றிய நிறுவனத் தலைவர்கள், அங்கத்தவர்கள் ஆகியோரையும் காணலாம்.

# ஆலயங்களைத் தவறாக வழி நடத்தினால் சமூக ஒற்றுமையை அது சீர்குலைத்துவிடும்

### கும்பாபிஷேக விழாவில் அரச அதிபர்



(அச்சுவேலி)

ஆலயங்கள் மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு மட்டுமன்றி, கிராம மக்களின் ஒற்றுமையிலும் பெரும்பங்காற்றி வருகின்றன. இவ்வாறாக மக்களை ஒற்றுமையுள்ளம் படைத்தவர்களாகவும், நல்ல ஒழுக்க சீலர்களாகவும் மாற்றி சமூக ஒற்றுமையை நிலைநாட்டுவதில் பங்காற்றிவரும் ஆலயங்களின் நற்பணியைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அச்சுவேலி காட்டுமலை கந்த சுவாமி கோவில் இராஜகோபுர மகா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், மக்கள் அன்று தொட்டு. இன்று வரை மிகவும் புனிதமாகவும், தனித்துவமாகவும் பேணுகின்ற இடங்களில் ஆலயங்கள் முதலிடம் வகிக்கின்றன. தமது மனக்கசப்புகளை எல்லாம் களைந்து உள்ளப் பூரிப்புடன் ஒன்று சேர்கின்ற இடமாகத் திகழும் ஆலயங்கள் சமூக நல்வழிப் படுத்தலில் ஒப்பற்ற பங்கினை ஆற்றிவருகின்றன. இத்தனை சிறப்புமிக்க ஆலயங்களை இன, மத பேதமின்றி அனைவரும் மதித்து துதி செய்ய வேண்டும். இதன் மூலம் மனத்தினுள்ள அழுக்குகள் அகன்று, நல்ல சிந்தனைகள் ஊற்றெடுக்கும்.

இன்று சிலர் ஆலயங்களைத் தவறாக வழிநடத்த முயல்கின்றனர். இது சமூக ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடும். நாட்டின் அமைதித் தன்மைக்கு குந்தகம் விளைவித்துவிடும். ஒரு கிராமத்தின் ஆலய வளர்ச்சியைக் கொண்டே அவ்வூர் மக்களின் ஒற்றுமை, பண்பாடு, கலாசாரம் என்பவற்றைத் தெளிவாக அறிந்துவிட முடியும். ஒவ்வொருவரும் எந்த அளவிற்குத் தம்மை ஒழுக்கசீலர்களாக ஆக்கிக் கொள்கிறார்களோ அந்தளவிற்கு நாட்டின் ஒற்றுமை என்றும் நிலைத்திருக்கும் என்றார். (03)

## ஊழியர்கள் நியமனம்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அலுவலகப் பணியாளர்கள் (சிற்றூழியர்கள்) மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் கொழும்பில் இவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மூன்று பணியாளர்களுடன் (சிற்றூழியர்கள்) மட்டுமே இவ் அலுவலகம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (86)

## மகா கும்பாபிஷேகம்

(கொக்குவில்)

கொக்குவில் மஞ்சவனப் பதி அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி ஆலய மகாகும்பாபிஷேகப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. இக்கும்பாபிஷேக நிகழ்வுகள் இன்றைய தினம் 7.00 மணியிலிருந்து 10.00 மணி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். எவ்.எம். அலைவரிசையூடாக நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளது. நேர்முக வர்ணனையை காரை எம்.பி. அருளானந்தன் தொகுத்து வழங்குவார். (60)

□ □ □

யாழ்ப்பாணம் - ஈச்சமோட்டை கலட்டிப்புலம் திருவருள் மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான புனராவர்த்தனப் பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று காலை 7.00 மணி முதல் கிரியைகள் ஆரம்பமாகி 10.52 மணியளவில் ஸ்தூபிகள் கும்பபிஷேகமும் 11.52 மணியளவில் மகா கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது. (60)

# வீதி புனரமைப்பு மந்தகதி; மாந்தை கிழக்கின் அவலம்

### பொதுமக்கள் ஏக்கம்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட வீதியின் புனரமைப்புப் பணிகள் இதுவரை பூர்த்தியடையவில்லை எனப் பல தரப்பினரிடம் இருந்தும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகிறது.

'என்றிப்' திட்டத்தின் கீழ் கடந்த வருடம் இவ்வீதியினை புனரமைப்பதற்கு முன்மொழியப்பட்டபோதிலும், புனரமைப்புப் பணிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மாந்தை கிழக்கு - பாண்டியன்குளம் பிரதேசத்தின் வீதிகளைப் புனரமைப்பதற்கென பொறுப்பேற்றுக் கொண்ட ஒப்பந்தகாரர்கள் மந்தகதியில் செயற்படுவதனாலேயே இவ்வீதிப் புனரமைப்புப் பணிகள் பூர்த்தியடையாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் கவனம் எடுத்து இவ்வீதியை விரைவாக புனரமைத்துத் தருமாறு அப்பிரதேசத்தின் பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்படுகிறது. (110)

## வீதியோரங்களில் சைக்கிள்களை நிறுத்தவேண்டாமென அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பொதுச்சந்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வீதியோரமாக துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்களை நிறுத்த வேண்டாம் என நல்லூர் பிரதேச சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். சந்தைப் பகுதியில் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆயினும் சந்தைக்கு வருபவர்கள் போக்குவரத்துக்கு இடையூறான வகையில் வீதி ஓரங்களில் நிறுத்தி வருகின்றனர். இதனால் பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றினைக் கருத்திற் கொண்டே மேற்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அண்மையில் கொக்குவில் பொதுச்சந்தைப் பகுதியில் வீதிப் போக்குவரத்திற்கு இடையூறாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் பிரதேச சபையினரால் எடுத்துச் செல்லப்பட்டு தண்டப்பணம் அறவிடப்பட்ட பின்னர் மீள ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கா)

## தொழில்நுட்பவியல் பாடநெறி அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியலில் இளமாணி, தொழில்நுட்பவியலில் டிப்ளோமா மற்றும் அத்திவார மட்ட பாடநெறி நிகழ்ச்சித் திட்டங்கள் - 2011, 2012 இற்கான அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பிறவுண் வீதியில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திரனியல் தொழில் நுட்ப பீட பீடாதிபதி பேராசிரியர் டபிள்யூ ஏ. விமலவீர தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபி விருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் சிறப்பு விருந்தினராகவும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்), யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் க. கமலேந்திரன், நல்லூர் அமைப்பாளர் அ. இரவீந்திரதாசன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (பா)

## விலங்கு விசர்நாய்க்கடி தினத்தை முன்னிட்டு பாடசாலை மட்டத்திலான போட்டிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச விலங்கு விசர்நாய்க்கடி தினத்தை முன்னிட்டு (செப்ரம்பர் - 28) யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் பாடசாலை மட்டத்தில் கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் தரம் 7உம், அதற்கு மேற்பட்ட மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியும். அத்துடன் போட்டிகள் 'அ', 'ஆ' என இரு பிரிவுகளாக நடத்தப்படும்.

கட்டுரைப் போட்டிக்குரிய தலைப்பாக "விலங்கு விசர்நாய்க்கடி நோயிலிருந்து எதிர்கால சமூகத்தைப் பாதுகாப்போம்" என்னும் விடயத்தின் கீழ் 500 சொற்களுக்குக் குறையாமல் ஆக்கம் அமைதல் வேண்டும்.

ஓவியப்போட்டிக்குரிய தலைப்பாக "பொதுமக்களுக்கு விலங்கு விசர் நாய்க்கடி நோயிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதாகவும் அவற்றைக் கடைப்பிடிக்கத் தூண்டு வதாகவும்" அமைவதுடன் ஏ2 (Size) அளவுப் பிரமாணங் கொண்டதாக ஓவியம் வரையப்படல் வேண்டும்.

போட்டியில் முதலாமிடத்துக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், இரண்டாமிடத்துக்கு 5 ஆயிரம் ரூபாவும், 3ஆவது இடத்துக்கு 3 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவதுடன், ஐந்து ஆறுதல் பரிசுகளில் ஒவ்வொன்றிற்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

போட்டியாளர்கள் ஆக்கங்களை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'சர்வதேச விலங்கு விசர்நாய்க்கடி தினத்தையொட்டிய கட்டுரைப் போட்டி - 2011' அல்லது 'ஓவியப் போட்டி - 2011' எனக் குறிப்பிட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, இல. 572/37 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# வலிகாமம் வடக்கில் மீள்குடியேறிய மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்தது

(கட்டுவன்)

வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் நிலவி வந்த குடிநீர்ப் பிரச்சினை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் தீவிர முயற்சியின் பயனாக தீர்வு காணப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இப்பிரதேச மக்கள் பிரதிநிதிகள் தாங்கள் எதிர்நோக்கி வரும் குடிநீர்ப் பிரச்சினை மற்றும் ஏற்கனவே பௌசர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டுவரும் குடிநீர் தமக்குப் போதுமானதாக இல்லை. தமக்கு குடிநீர் வசதியைப் பெற்றுத் தருமாறு அமைச்சரிடம் கோரியிருந்தனர்.

இதனையடுத்து பிரதேச சபையும் இப்பிரச்சினை தொடர்பாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததை அடுத்தே இதற்கான தீர்வு எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சேவாலங்கா நிறுவனத்தினால் 4 நீர்த்தாங்கிகளும், யுனிசெவ் நிறுவனத்தினால் 5 நர்த்தாங்கிகளும் வழங்கப்பட்டன.

எனினும், 5 நீர்த்தாங்கிகளுக்கு நீர் நிரப்பப்படவில்லை என அப்பிரதேச மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஈ.பி.டி.பியின் தெல்லிப்பளை பிரதேச அமைப்பாளர் அன்பு, பிரதேச செயலாளரிடம் கலந்துரையாடியதை அடுத்து, பிரதேச சபை இவற்றுக்கான நீர் நிரப்பப்படாமைக்கு எரிபொருள் பற்றாக் குறையே காரணம் எனச் சுட்டிக் காட்டியிருந்தது. இதன்பின்னர் எரிபொருள் செலவை யுனிசெவ் நிறுவனம் தாம் பொறுப்பெடுத்துக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, இப்பிரதேசத்துக்கான குடிநீர் விநியோகம் தற்போது சீரான முறையில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (22)

# 50 குடும்பங்களுக்கு வாழ்வதார உதவிகள்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அண்மையில் மீள்குடியேறியோருக்கான வாழ்வாதாரத்திட்டத்தின் கீழ் உணவு விவசாய நிறுவனத்தினால் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட 25 குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள் அவற்றுக்கான உணவு, உபகரணங்கள் என்பவற்றுடன் கூடு அமைப்பதற்கான மூலப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

மேலும் இதே தகைமைகளைக்கொண்ட வேறு 25 குடும்பங்களுக்கு ஆடுகள் வழங்குவதற்கும் நடவடிக்கையினை இந்நிறுவனம் எடுத்துள்ள அதேவேளை ஆடுவளர்ப்பதற்கான கொட்டில் அமைப்பதற்கும் மூலப்பொருட்களை வழங்கவுள்ளது. (86)

# பாடசாலை செயற்பாடுகளுக்கு கல்வி அமைச்சு நிதி ஒதுக்கீடு

(அச்சுவேலி)

அரசாங்க பாடசாலைகளிற்கான 2011 ஆம் ஆண்டிற்கான தர உள்ளீட்டுப் பொருட்கொள்வனவிற்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் ஆசிரியர் மற்றும் மாணவர் மட்ட உயர்மட்டச் செயற்பாடுகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் கல்வி அமைச்சினால் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு, உயர்பிரிவு என்ற ரீதியில் பாடசாலைகளின் தரங்களுக்கமைய இவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு, அவை தொடர்பான ஒதுக்கீட்டு விபரங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த நிதிகளைப் பயன்படுத்திக் கொண்டமை தொடர்பான அறிக்கைகள் பாடசாலைகளில் பேணப்பட வேண்டியது முக்கியமான தொன்றாகும். (03)

# புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் தேசிய மட்டத்தில் ஆறாம் இடம்

(அச்சுவேலி)

கல்வி அமைச்சினால் வட மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட தகவல் தொழிநுட்ப கற்கை வள நிலையங்களிற்கிடையிலான போட்டியில் 'சி' பிரிவில் நான்காம் இடத்தைப் பெற்றுக்கொண்ட யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் அதே பிரிவில் தேசிய மட்டத்தில் ஆறாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் மிகவும் சிறப்பான இடங்களைப் பெற்றுள்ளமைக்காக இப்பாடசாலைக்கு கல்வி அமைச்சினால் 1.3 மில்லியன் ரூபா பெறுமதியான தகவல் தொழினுட்ப சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கு வதற்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் க.பொ.த (சா/த) வரையான வகுப்புக்களை கொண்ட வகை 11 (type-ii) ஐச் சேர்ந்த இப்பாடசாலைக்கு மேற்படி பரிசுத்தொகை கிடைக்கப்பெற்றமைக்காக அப்பாடசாலையின் தகவல் தொழில் நுட்பத்துறை பொறுப்பாசிரியர் சின்னத்தம்பி பிரகாசினை பாடசாலைச் சமூகத்தினர் வெகுவாகப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (03)





வவுனியா கூட்டுறவு மத்திய நிலையத்தை வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி திறந்து வைப்பதையும், 40 மில்லியன் ரூபாவுக்கான காசோலையை வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரிடம் வழங்குவதையும், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமியையும் காணலாம்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(12.06.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

வைகாசி 29 ஆம் நாள்.

இராகுகாலம 04.22-5.52, சுபநேரம் 8.52 -10.22

நட்சத்திரம் சித்திரை காலை 6.19 வரை

சுவாதி பி.இ. 4.51 வரை

திதி: ஏகாதசி மு.ப 9.48 வரை. ஏகாதசி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:-** காரிய சித்தி, பணப்புழக்கம், மருத்துவச் செலவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, விபத்து வரலாம்.

**ரிஷபம்:-** தேக ஆரோக்கியம், பண வரவு, குடும்பத்தில் குதூகலம், மன மகிழ்ச்சி, நல்ல செய்தி வரும்.

**மிதுனம் :-** பணப்புழக்கம், குடும்பத்தில் குழப்பம், தேக ஆரோக்கியம், மனச் சஞ்சலம், காரியத்தடை.

**கடகம்:-** பணக் கஷ்டம், காரிய அனுகூலம், குடும்பத்தில் கவலை, தூரத்திலிருநது துக்க செய்தி, நண்பர் தொல்லை

**சிம்மம்:-** காரிய சித்தி, தேக ஆரோக்கியம், பணம் வரம், விபத்து வரும், கவலை.

**கன்னி :-** தேக நலக்குறைவு, காரியத் தடை, குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், உறவினர் வருகை.

**துலாம் :-** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், உடல் நலமின்மை, நண்பர் தொல்லை, காரிய சித்தி.

**விருச்சிகம்:-** பணப்புழக்கம், தேக நலக்குறைவு, காரிய சித்தி, மருத்துவச் செலவு, நண்பர் வருகை.

**தனுசு:-** மனச் சஞ்சலம், பணக் கஷ்டம், விப்த்து வரலாம், உடம்பு நலம் பாதிப்பு, கவலை.

**மகரம்:-** தேகநலக் குறைவு, பணப் புழககம், குடும்பத்தில் குழப்பம், மருத்துவச் செலவு, நண்பர் தொல்லை.

**கும்பம் :-** பண வரவு, காரிய சித்தி, தேக ஆரோக்கியம், மன மகிழ்ச்சி, ஆனந்தம்.

**மீனம்:-** குடும்பத்தில் குழப்பம், நண்பர் தொல்லை, உடல்நலம் பாதிப்பு, காரியத்தடை, விரக்தி.

# புனர்வாழ்வளிக்கப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு சுயதொழில் உதவித்தொகையாக கடன்திட்டம்

(கட்டுவன்)

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு கடந்தகால போர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்குமான சுயதொழில் கடன்கள் வழங்கும் திட்டத்தில் வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் 109 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கடன்கள் இலங்கையின் யாழ். பிராந்திய கிளைகளூடாக வழங்கப்பட்டு வருகிறது.

கடன் பெறுவோரின் பெயர் விபரங்கள் வருமாறு:

எஸ். ஜெயானந்தகுமார் (மல்லாகம் தெற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), என். துஷ்யந்தி (மங்களா வீதி, மல்லாகம் - 2 இலட்சம்), எஸ்.சிவநாதன் (மல்லாகம் தெற்கு - 3 இலட்சம்), ஏ.அரசகுமார் (மல்லாகம் வடக்கு - 2 இலட்சம்), என்.சுதன் (கால்லறை, மல்லாகம் - 2 இலட்சதது 50 ஆயிரம்), என்.ஜோதிராஜா (அளவெட்டி தெற்கு - 2 இலட்சம்), எஸ்.பரமேஸ்வரன் ( அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), இ.யோகராசா (தக்கனா வத்தை - 2 இலட்சத்து 50 ஆயிரம்), ரி.தங்கபூபதி (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), எஸ். தியானராசா (அளவெட்டி மேற்கு -2 இலட்சத்து 50 ஆயிரம்), பி.இந்திராணி (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), கே.சதீதரன் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), கே.சண்முகலிங்கம் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), ஆர். காசவநாதன் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), டபிள்யூ சிவராசு (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), எஸ்.ரஞ்சன் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), பி.சஜிதன் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சம்), ஜி.கருணாகரன் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), ரி.மோகனதாஸன் (பன்னாலை - 3 இலட்சம்), கே.தவரஞ்சினி (அளவெட்டி மேற்கு - 2 இலடசத்து 50 ஆயிரம்), ஜி.ராசபூப்பதி (அள வெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), அ.பத்திநாதன் (கனேஸ்வரம் - 2 இலட்சம்).

எஸ்.முத்துலிங்கம் (அளவெட்டி மத்தி - 2 இலட்சம்), ரி.தனுராஜ் (அளவெட்டி மத்தி - 2 இலட்சம்), எஸ்.சிவகுமாரன் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), கே.இராசகுலேந்திரன் (மல்லாகம் வடக்கு - 2 இலட்சம்), கே.சிவலிஙகம (துர்க்காபுரம் - 2 இலட்சத்து 50 ஆயிரம்), எம்.கேசவன் மகாவானன் (அளவெட்டி மத்தி 2 இலட்சத்து 50 ஆயிரம்), யூ.பியூட்டி (அளவெட்டி மத்தி - 2 இலட்சத்து 50 ஆயிரம்), ஜே.ரோபேட்கனடி (மல்லாகம் வடக்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), பி.தனராஜ் (மல்லாகம் வடக்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), எஸ்.சின்னத்துரை ((மல்லாகம் வடக்கு - 2 இலடசம்), ஜெ.நகுலன் (துர்க்காபுரம் - 2 இலட்சம்), கே.இராஜேஸ்வரி (பன்னாலை - 3 இலட்சம்), பி.அஞ்சலோ (இளவாலை - 2 இலட்சம்), வி.துரைசிங்கம் (மல்லாகம் தெற்கு - 3 இலட்சம்), கே.பால மோகன் (தெல்லிப்பளை - 2 இலட்சத்து 50 ஆயிரம்), என்.தேவதாஸ் (பன்னாலை - 2 இலட்சத்து 50 ஆயிரம்), மனிகா ஜீவராணி (மல்லாகம் வடக்கு - 1 இலட்சத்து 50 ஆயிரம்), எஸ்விஜயகாந் (மல்லாகம் மத்தி - 2 இலட்சத்து 50 ஆயிரம்), ஐ.புஸபராணி (சுன்னாகம் தெற்கு - 3 இலட்சம்), எஸ். தவரஞ்சனா (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), வி.சத்தியவேல் (அளவெட்டி தெற்கு - 2 இலட் சத்து 50 ஆயிரம்), பி.சிவந்திரன் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), பி.யோகேஸ்வரன் (அளவெட்டி மேற்கு -2 இலட்சத்து 50 ஆயிரம்), எம்.கலாவதி (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), ஆர்.அன்ரூ மரியரூஸ் ராஸின் (இளவாலை வடமேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), பி.கதீஸ்வரன் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), ஏ.புனிதவதி (அளவெட்டி மேற்கு - 1 இலட்சம்), எஸ்.சிவகுமார் ( (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), பி.யுவன் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), ரி.ஜெயசிங்கம் (அளவெட்டி மேற்கு - 2 இலட்சத்து 50 ஆயிரம்), எஸ்.மகேஸ்வரன் (தெல்லிப்பளை - 2 இலட்சத்து 50 ஆயிரம்), கே.சிதம் பரநாதன் (மல்லாகம் மத்தி 2 இலட்சத்து 50 ஆயிரம்), எஸ்.முருகமூர்த்தி (மல்லாகம் வடக்கு -2 இலட்சத்து 50 ஆயிரம்).

(தொடரும்....)



ஹச் தொலைபேசி நிலைய வட, வடமேல் சிரேஷ்ட விற்பனை முகாமையாளர் அஜந்த கல்தேரா வல்வை விளையாட்டுக்கழகத்தினருக்கான சீருடை வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் : கார்த்திகேயன்)

# மரதன், சைக்கிளோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளின் இன்றைய போட்டியாக ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி காலை 6.00 மணிக்கு கலைமதி விளையாட்டுக்கழக முன்றலில் இருந்து ஆரம்பமாகி அதே முன்றலில் நிறைவடையும் என்றும், தொடர்ந்து 7.00 மணிக்கு பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி நிலைய முன்றிலிலிருந்து ஆரம்பமாகி அதே முன்றிலில் நிறைவடையும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் இன்றைய தினம் கலைமதி விளையாட்டு மைதானத்திற்கான புதிய விளையாட்டு அரங்கும் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும், மெய்வல்லுநர் போட்டிகளும் நடைபெறும் என்றும் தெரிவித்தனர்.

ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நேற்றிரவு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# கால்பந்தாட்டப் போட்டியில் யாழ். மகளிர் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மகளிர் அணி வெற்றிபெற்றது.

மின்னொளியில் நடைபெற்று வரும் இப்போட்டி புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இப்போட்டியில் பருத்தித்துறை நக்கீரன் மகளிர் அணியும், யாழ்ப்பாணம் மகளிர் அணியும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிப்பாகவும், சுவாரஸ்யமாகவும் நடைபெற்ற இப்போட்டியில், யாழ்ப்பாணம் மகளிர் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அணிகள் பங்குபற்றின. இதில் உரும்பிராய் உதயசூரியன் மற்றும் உரும்பிராய் அண்ணா ஸ்ராஸ் ஆகிய அணிகள் மோதின. இறுதி வரை மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளுமே கோல் எதனையும் போடவில்லை. இதனைத் தொடர்ந்து சமநிலை உடைப்பு மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் உதயசூரியன் அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## விளையாட்டு செய்திகள்

## சாய்னா நேவால் தோல்வி

(பாங்கொக்)

தாய்லாந்து ஓபன் பட்மின்ரன் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் தோல்வி அடைந்தார். தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் தாய்லாந்து கிராண்ட் பிரிக்ஸ் கோல்டு பட்மின்ரன் தொடரில் சீனாவின் சுயுரு லியிடம் 13-21, 12-21 என்ற செட் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

## மரதன் ஓட்டம் இன்று

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மரதன் ஓட்டப் போட்டி இன்று காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இப்போட்டி கோப்பாய் பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து ஆவரங்கால், வல்லைச் சந்தி, புறாப்பொறுக்கிச் சந்தி, குஞ்சர்கடைச் சந்தி மூத்த விநாயகர் கோவிலடி, நெல்லிடிய ஊடாக கரவெட்டி பிரதேச சபைக்கு முன்னாள் முடிவடையவுள்ளது.

இதில் பங்குபற்றும் வீரர்களுக்குத் தங்குமிட வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆண்களுக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும், பெண்களுக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட் டங்களிலிருந்து போட்டியில் கலந்து கொள்கின்றனர். (12)





கலைமதி விளையாட்டுக்கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று முன்தினம் மின்னொளியில் நடைபெற்ற ஆண்களுக்கான கால்பந்தாட்டப் போட்டியில் புதிய ஜனநாயக லெனின் மாட்சிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் செந்தில்வேல் போட்டியாளர்களுக்கு கைலாகு கொடுப்பதையும், பெண்களுக்கான போட்டியில் கலந்துகொண்ட அணி வீரர்களையும் காணலாம். (படம் : கி. கஜன்)

# வலிகாமம் வலயமட்ட மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(வலிகாமம்)

வலிகாமம் வலய்ப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் முதன் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வெளியாகியுள்ளது.

**11 வயது - ஆண்கள்**

**75 மீற்றர் ஓட்டம்**

எஸ்.சுகிர்தன்-இளவாலை ஏ.எம்.ரி.எம்.எஸ், ஆர்.நிதர்சன்-மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, டி.டர்வின்- இளவாலை ஆர்.சி.

**100 மீற்றர் ஓட்டம்**

டி.டர்வின்-இளவாலை ஆர்.சி, ஆர்.நிதர்சன்-மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, எஸ்.பிரதாபன்-இணுவில் மத்திய கல்லூரி.

**உயரம் பாய்தல்**

ஆர்.சங்கீத்.-இளவாலை சைவ சன்மார்க்கா, இ.வெஸ்ரின்ஜீவா-பண்டத்தரிப்பு ஜெசிந்தர், கே.திவிசன்-மூளாய் சைவப்பிரகாசா.

**நீளம் பாய்தல்**

டி.டர்வின்-இளவாலை ஆர்.சி, என்.யூலியாட்டினோசன் -உடுவில் மத்திய கல்லூரி, ஆர்.கோடீஸ்வரன்-சுழிபுரம் கியசங்கா.

**13 வயது ஆண்கள்**

**100 மீற்றர் ஓட்டம்**

பி.கனிஸ்ரன்-ஹென்றிஸ் கல்லூரி, கே.தர்சன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி, கே.பிரதீப்-வட்டு இந்துக் கல்லூரி.

**200 மீற்றர் ஓட்டம்**

பி.கனிஸ்ரன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி, என்.சிந்துஜன்-வட்டு இந்துக் கல்லூரி, எஸ்.மனோகரன்-பன்னாகம் மெய்கண்டான்.

**உயரம் பாய்தல்**

ஜெ.மகிபன்-ஸ்கந்தவரோதயக் கல்லூரி, ஜெ.அனோஜன்-சின்னக்கலட்டி ஞானோதயா, எஸ்.யதுர்ஷன்-அருணோதயக் கல்லூரி.

**நீளம் பாய்தல்**

ஜி.அன்ரனிதாஸ்-ஹென்றியரசர் கல்லூரி, கே.பிரதீப்-சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி, எஸ்.சுஜீவன் -குட்டியபுலம் மகா வித்தி.

**15 வயதுப் பிரிவு**

**100 மீற்றர் ஓட்டம்**

எஸ்.சாருகன்-சங்கானை சைவப்பிரகாச வித்தி, பி.விதுர்ஷன்-அருணோதயக் கல்லூரி, ரி.சாரங்கன் - மகாஜனக் கல்லூரி.

**200 மீற்றர் ஓட்டம்**

எஸ்.சாருகன்-சங்கானை சைவப்பிரகாச வித்தி, ஏ.அருள்ஜோதி - யாழ்ப்பாணக் கல்லூரி, ரி.சாரங்கன்-மகா ஜனக் கல்லூரி.

**400 மீற்றர் ஓட்டம்**

ஏ.அருள்ஜோதி-யாழ்ப்பாணக் கல்லூரி, எஸ்.சஜீபன்-அருணோதயக் கல்லூரி, ஜெ.அஜிந்தன் -ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**100 மீற்றர் கேடில்ஸ்**

என்.அருண்-ஹென்றியரசர் கல்லூரி, ஆர்.நிரோஜன்-விக்ரோறியாக் கல்லூரி, ஜெ.நிரோசன்-வயாவிளான் மத்திய மகா வித்தி.

**400 மீற்றர் கேடில்ஸ்**

ஜெ.நிரோசன்-வயாவிளான் மத்திய மகா வித்தி, ஆர்.ஜொகன் பற்றிக்-பண்டத்தரிப்பு ஜெசிந்தா, எஸ்.ஆனந்தப்பிள்ளை-மகாஜனக் கல்லூரி.

**உயரம் பாய்தல்**

என்.கார்த்தீபன்-சின்னக்கலட்டி ஞானோதயா, ஆர்.ஜொகன் பற்றிக் -பண்டத்தரிப்பு ஜெசிந்தா,எஸ்.விபுல்- அருணோதயக் கல்லூரி, எஸ்.பிரசன்னா-அராலி இந்துக் கல்லூரி.

**நீளம் பாய்தல்**

எஸ்.சாருகன்-சங்கானை சிவப்பிகாச வித்தி, இ.திலக்சன்-மானிப்பாய் மொமோறியல், பி.விதுர்ஷன்-அருணோதயக் கல்லூரி.

**குண்டெறிதல்**

கே.நிரோஷ்குமார்-மகாஜனக் கல்லூரி, எம்.சஜீபன்-சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி, எஸ்.கிருஷாந் - ஹென்றியரசர் கல்லூரி.

**தட்டெறிதல்**

கே.நிரோஷ்குமார்-மகாஜனக் கல்லூரி, ஜெ.பிரசன்னா- மூளாய் சிவப்பிரகாச, ஜெ.டொறிசன்- வயாவிளான் மகா வித்தி.

**ஈட்டி எறிதல்**

ஆர்.ஜொன்பற்றிக்-பண்டத்தரிப்பு ஜெசிந்தா, எஸ்.கிருஷாந்-சங்கானை சிவபபிரகாச மகா வித்தி, கே.கோசிகன் - இணுவில் இந்துக் கல்லூரி.

**17 வயதுப் பிரிவு**

**100 மீற்றர் ஓட்டம்**

எம்.தினேஸ்குமார்-விக்ரோறியாக் கல்லூரி, ரி. செரூபன் அருணோதயக் கல்லூரி, ஏ.அன்ரனிபிரசாத் - குளமங்கால் ஆர்.சி.

**200 மீற்றர் ஓட்டம்**

பி.கஜந்தன்-ஏழாலை ஸ்ரீமுருகன், ஏ.அனுஜன் - ஆனைக்கோட்டை ஆர்.சி, சி.பிரதாஸ்-மல்லாகம் மகா வித்தி.

**19 வயதுப் பிரிவு**

எம்.ஜெனோசன்-மானிப்பாய் மெமோறியல், கே.அனுசியன்-யூனியன் கல்லூரி, எஸ்.விதுர்சன்-நவாலி மகா வித்தி.

**200 மீற்றர் ஓட்டம்**

எம்.ஜெனோசன்-மானிப்பாய் மெமோறியல், எஸ்.விதுர்சன்-நவாலி மகா வித்தி, யூ.அகில்ராஜ்-அருணோதயக் கல்லூரி.

**400 மீற்றர் ஓட்டம்**

ஜி.ஜுட்லஸ்-வயாவிளான் மத்திய மகா வித்தி, என்.ரிஷதரன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி, ஜெ.அன்ரனி விவேக் - ஹென்றியரசர் கல்லூரி.

**800 மீற்றர் ஓட்டம்**

எஸ்.அகில்ராஜ்-அருணோதயக் கல்லூரி, எம்.ஜெனோசன்-மானிப்பாய் மொமோறியல் கல்லூரி, என்.ரிஷாதரன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**1500 மீற்றர் ஓட்டம்**

எஸ்.சுகில்ராஜ்-அருணோதயக் கல்லூரி, எஸ்.சுஜிதா-ஹென்றிஸ் கல்லூரி, எம்.பிரசாந்-மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**5000 மீற்றர் ஓட்டம்**

எஸ்.அகில்ராஜ்-அருணோதயாக் கல்லூரி, ஜெ.அன்ரனி ஜெயராஜ்-ஹென்றியரசர கல்லூரி, எஸ்.மயூரன்-விக்டோரியாக கல் லூரி.

**400 மீற்றர். ஓட்டம்**

ஜெ.ஜனந்தன்-மகாஜனக் கல்லூரி, சி.பிரதாஸ்-மல்லாகம் மகா வித்தி, ரி.சுதர்சன்-ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

**800 மீற்றர் ஓட்டம்**

என்.அன்ரனி ரதன் -ஹென்றிஸ் கல்லூரி, ஆர்.ரஜீவன்-மானிப்பாய் இந்துக் கல்லூரி, எம்.கிருஷாந்த் - விக்ரோறியாக் கல்லூரி.

(தொடரும்.)

# மெக்ஸிக்கோவின் 5 கால்பந்து வீரர்கள் ஊக்கமருந்து சோதனையில் சிக்கினர்

(மெக்ஸிக்கோ)

மெக்ஸிக்கோ தேசிய கால்பந்தாட்ட அணியின் ஐந்து வீரர்கள் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பயன்படுத்தியுள்ளதாக ஆரம்பகட்ட பரிசோதனைகள் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

மெக்ஸிக்கோ அணியின் கோல் காப்பாளர் குலர்மோ ஒக்கோ, பின்களத் தடுப்பாளர் பிரான்சிஸ் கோ நொட்றிக்ஸ், எட்கர் டியூனஸ், நடுத்தர வீரர் அன்ரோனியோ நயில்சன் மற்றும் கிறிஸ் ரியன் பேமுடா ஆகிய ஐந்து வீரர்களுமே தடை செய்யப் பட்ட ஊக்க மருந்தைப் பாவித்தவர்களாவர்.

யுனைட்டட், கொன்காகவ் கிண்ணத்திற்கான கால்பந்தாட்டத் தொடரில் பங்கேற்றுள்ள மெக்ஸிக்கோ அணி கடந்த வியாழக்கிழமை நடந்த போட்டியில் கியு,பாவை 5-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஊக்க மருந்துச்சோதனை தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையின் இறுதி முடிவிற்காக தாம் காத்திருப்பதாக மெக்ஸிக்கோ அணியின் பயிற்றுநர் ஜோஸ் மனுவல் தெரிவித்தார். வீரர்கள் ஊக்கமருந்து பாவித்தமை நிரூபணமானால் இரண்டு வருடத் தடை விதிக் கப்படுமெனவும், அவ்வாறு ஊக்க மருந்து பாவித்திருப்பின் அது மெக்ஸிக்கோ நாட்டுக்கு பெரும் அவமானம் என்றும் மெக்ஸிகோ கால்பந்தாட்ட செய லாளர் டிகோடி மரியா தெரிவித்தார்.

# பழைய நிலையை எட்ட மீண்டும் முயலும் உசைன்

(ஆஸ்லே)

நான் பழைய உசைன் போல்ட் இல்லை. ஆனால் அந்த நிலையை எட்ட மீண்டும் முயன்று வருகின்றேன் என்று சாதனை ஓட்ட வீரர் உசைன் போல்ட் தெரிவித்தார்.

ஆஸ்லேவில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டத்தில் கலந்து கொண்ட உலக சம்பியன் உசைன் போல்ட் முதலிடம் வந்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் காயத்திலிருந்து மீண்டு வந்திருப்பதால் முதலில் ஓட்டத்தை முழுதும் ஓட முடிகிறதா என்று பார்க்கிறேன். ஆனாலும் முதலிடம் வருவது மகிழ்ச்சியளிக்கிறது.

ரசிகர்கள் என்னிடமிருந்து அதிகம் எதிர்பாக்கிறார்கள். நானே எனக்கு உயர்ந்தபட்ச இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டுள்ளேன். இருப்பினும், நானும் மனிதன்தான். காயமடைந்து மீண்டு வருவது எளிதானதல்ல. லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் சாதிப்பதே எனது இலட்சியம். அதற்கான பயிற்சிகளில் தீவிரமாக ஈடுட்டுள்ளேன் என்று உசைன் போல்ட் மேலும் தெரிவித்தார்.



ஹெர்னான்டஸ்

# இலங்கை வீரர்களுக்கு அரச நிறுவனங்களில் வேலை

(கொழும்பு)

உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வீர, வீராங்கனைகளுக்கு அரசாங்க சேவைகளில் வேலைவாய்ப்புக் களைப் பெற்றுக்கொடுக்கும் திட்டமொன்றை விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே முன்னெடுத்துள்ளார். இந்தத் திட்டத்துக்கு பல்வேறு அரசாங்க நிறுவனங்களிடமிருந்து சாதகமான பதில் கிடைத்திருப் பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டிகளில் கலந்துகொள்ளும் வீர, வீராங்கனைகளின் எதிர்காலத்தைப் பலப்படுத்தும் நோக்கிலேயே இத்திட்டத்தை முன்னெடுத்திருப்பதாகக் குறிப் பிட்ட அமைச்சர், இதன்மூலம் அவர்கள் தமது திறமைகளை சரியான முறையில் வெளிப்படுத்தி இலங்கைக்கு நற்பெயரை ஏற்படுத்துவார்கள் என்றும் கூறினார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் இத்திட்டத்துக்கு உதவ முன்வந்துள்ளன. எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விளையாட்டு வீர, வீராங்கனைகளை எரிசக்தி மற்றும் மின்சாரத்துறை அமைச்சில் வேலைக்கு அமர்த்த முன்வந்துள்ளார்.

அதேபோல, இலங்கையின் தேசிய கூடைப்பந்து அணி வீர, வீராங்கனைகளுக்கு துறைமுக அதிகாரசபையில் வேலை வாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. கரப்பந்து அணியிலுள்ள வீர, வீராங் கனைகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இணைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, தேசிய ரீதியிலான நீச்சல் வீர, வீராங்கனைகள் தேசிய சேமிப்பு வங்கியிலும் இணைத்துக் கொள்ளப்படவிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் அறிவித் துள்ளார். உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் போட்டிகளில் திறமையாகச் செயற்படும் வீர, வீராங்கனைகளை தமது நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்திக்கொள்வதற்கு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியனவும் முன்வந்துள்ளன என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறினார். அத்துடன், தேர்ந்தெடுக்கப்பட்ட 15 விளையாட்டுக்களுக்கு அனுசரணைகளை வழங்கப் பல்வேறு தனியார் நிறுவ னங்களும் முன்வந்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அழைப்பை நிராகரித்தார் அதிரடி வீரர் ஹெர்னான்டஸ்

மான்செஸ்டர் யுனைடெட் அணியின் அதிரடி வீரர் ஜாவியர் ஹெர்னான்டஸ் ரியல் மட்ரிட் அணி அழைப்பை நிராகரித்தார்.

சர் அலெக்ஸ் பெர்குசனின் யுனைடெட் அணிக்கு விசுவாசமாகவே இருப்பேன் என அவர் தெரிவித்தார்.

ஸ்பெயினில் பிரமாண்ட அணியான மாட்ரிட் ஹெர்னான்டசை தங்களது பக்கம் இழுக்கப் பேரம் செய்து வருகின்றன என்று ஊடகத் தகவல்கள் வெளியாகின.

ஓல்டு டிராபோர்டின் கடந்த கோடைக்காலத்தின் 20 கோல்களை அடித்து ஹெர்னான்டஸ் பிரிட்டன் மக்களின் மனங்களைக் கவர்ந்தார்.

சிசாரிடோ என அனைவராலும் அறியப்படும் ஹெர்னான்டஸ் 60 இலட்சம் பவுண்ட் ஒப்பந்தத்தில் சிவாசில் இருந்து யுனைடெட் கிளப்பிற்கு வந்தார்.

23 வயது ஹெர்னான்டஸ் தனது எதிர்காலம் யுனைடெட்டின் தாயகமான ஓல்டு டிராபோர்டில் தான் இருக்கும் என அவர் தெரிவித்தார்.

ஐரோப்பாவிற்கு என்னைக் கொண்டு வந்த பெர்குசனுக்கு நன்றிக் கடன் பட்டுள்ளேன்.

யுனைடெட் கிளப்பில் இருந்து விலகிச் செல்லும் எண்ணமே இல்லை. இந்த முடிவில் மாற்றம் இல்லை என அவர் தெரிவித்தார்.

ஓல்டு டிராபோர்டில் ஹெர்னான்டஸ் தொடர்ந்து ஆட வேண்டும் என்பதற்காக அவருக்கு வார ஊதியம் 3 மடங்கு உயர்த்தப்பட்டு 75 ஆயிரம் பவுண்ட் தரப்படுவதாகவும் தகவல்கள் வந்துள்ளன. கால்பந்து, கோல்ப் போன்ற விளையாட்டு அல்ல. இது ஒட்டு மொத்த வீரர்களின் ஆட்டம் என அவர் தெரிவித்தார்.

வளர்ந்து வரும் வீரர்களின் ஹெர்னான் டஸ் மிகச் சிறப்பான வீரர். இவரின் ஆட்டம் அனைவரையும் கவர்ந்து கருகின்றது. இவருக்கான விலையும் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் இவரின் தீர்மானம் வரவேற்கத்தக்கது என கால்பந்தாட்ட விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# இங்கிலாந்திற்கு இந்தியா கடிதம்

(புதுடில்லி)

நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் முறையை (யு.டி.ஆர்.எஸ்.) அமுல்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தி இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கு, இந்திய கிரிக்கெட் சபை கடிதம் அனுப்பி உள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கான பயணம் முடிந்ததும் இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் முதல் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 4 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் தொழில்நுட்ப முறை 100 சதவீதம் துல்லியமாக இல்லை. ஒரு தரப்புக்கு சாதகமாக இருக்கிறது என்று டோனி, டெண்டுல்கர் உள்ளிட்டோர் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். ஒரு தொடரில் இந்த முறையை கொண்டு வருவது சம்பந்தப்பட்ட இரு நாட்டு கிரிக்கெட் சபையின் முடிவைப் பொறுத்தது என்பது ஐ.சி.சி.யின் வழிகாட்டுதலாகும். இந்திய சபையின் ஆட்சேபனை காரணமாக, யு.டி.ஆர்.எஸ். முறையை இங்கிலாந்து கொண்டு வராது என்று தெரிகிறது.

# தேர்வாளர்கள் கூறும் காரணத்தை ஏற்க முடியாது என்கிறார் கடிச்

(சிட்னி)

தொடக்க ஆட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் நான் நீக்கப்பட்டதாக காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்ரேலிய டெஸ்ட் அணியின் தொடக்க ஆட்டம் சிறப்பாக இருந்து வருகிறது. இந்த நிலையில், தேர்வாளர்கள் சொல்லும் காரணம் நம்பக்கூடியதாக இல்லை. இவ்வாறு வீரர்கள் ஒப்பந்தப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டமை குறித்து அவுஸ்ரேலிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கடிச் தெரிவித்தார்.

தேர்வாளர்களின் இந்த முடிவு எனக்கு மிகுந்த வருத்தத்தையும், ஏமாற்றத்தையும் அளிக்கிறது. தேர்வாளர்கள் என்னை நீக்க எடுத்த முடிவு மிகவும் அபத்தமானது என்று நினைக்கிறேன். தேர்வாளர்களின் நிலையற்ற தேர்வு முடிவால் கடந்த சில ஆண்டுகளில் நான் மட்டுமல்ல, பல வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சொந்த மண்ணில் 24 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக ஆஷஸ் தொடரில் அவுஸ்ரேலிய அணி தோல்வியைச் சந்தித்ததற்கு தேர்வாளர்களின் நிலையற்ற தேர்வுத் தன்மையே காரணமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நடால் அதிர்ச்சித் தோல்வி

(லண்டன்)

குயின்ஸ் கிளப் ரென்னிஸ் போட்டியில் உலகின் முதல் நிலை வீரர் ரபெல் நடால் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

கிராண்ட் சிலாம் போட்டியான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டிக்கு முன்னர் அவர் லண்டனில் நடைபெற்று வரும் குயின்ஸ் கிளப் போட்டியில் விளையாடினார்.

இதில் உலகின் 5ஆம் நிலை வீரர் ஜோ-வில்பிரட்டி சோங்காவிடம் அவர் அதிர்ச்சிகரமாகத் தோற்றார். இதில் நடால் 7-6 (7-3), 4-6, 1-6 என்ற கணக்கில் தோற்றார். இந்த வெற்றி தனது வாழ்க்கையில் மறக்க முடியாது என்று டிசோங்கா கூறி உள்ளார்.

இப்போட்டியில் ஏற்பட்ட தோல்வி அதிர்ச்சிகரமாக இருந்தாலும் அடுத்து வரும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் சாதிப்பதையே பெரும் இலக்காகக் கொண்டுள்ளேன். அதற்கான பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றேன் என தோல்வியின் பின் நடால் தெரிவித்தார்.

# மரடோனாவுக்கு அழைப்பு

வெனிசுலா மற்றும் ஆர்ஜென்டினா அணிகள் மோதும் நட்பு ரீதியிலான கால்பந்து போட்டி, கொல்கத்தாவில் வருகிற செப்டம்பர் 2ஆம் திகதி நடக்கிறது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள கால்பந்து ஜாம்பவான் மரடோனாவுக்கு அழைப்பு விடுக்கப்பட உள்ளது.

இதற்காக செலிபிரிட்டி மேனேஜ்மெண்ட் குழுமத்தின் தலைவர் பஸ்வாஸ் கோஸ்வாமி ஆர்ஜென்டினா செல்கிறார். அழைப்பை மரடோனா ஏற்றுக் கொள்வார் என நம்புவதாக கோஸ்வாமி தெரிவித்தார்.

## நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை நவம்பர் மாதம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாக. அந்த ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் பெற்று கொள்ளப் பட்ட சாட்சியங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே கற்று கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் சாட்சியங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தநிலையில் பெற்று கொள்ளப் பட்ட சாட்சியங்கள் தொடர்பாக ஆராய கால அவகாசம் தேவையாக இருப்பதாக லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## கட்டுநாயக்க மோதல் சம்பவம் குறித்து இரு வாரத்தில் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

பொலிஸாருக்கும் சுதந்திரவர்த்தகவலய ஊழியர்களுக்குமிடையில் கட்டுநாயக்கவில் நடந்த மோதல் பற்றிய அறிக்கையைத் தயாரித்து இரண்டு வாரங்களில் தனக்குச் சமர்பிக்குமாறு குற்றப்புலானாய்வு பொலிஸாரை பதில் பொலிஸ் அதிபர் என்.கே.இலங்ககோன் பணித்துள்ளார்.

இச்சம்பவத்தின்போது பொலிஸாரின் நடவடிக்கைகள் பற்றிய பொதுமக்களின் முறைப்பாடுகளை பதிவதற்கான விசேட ஏற்பாடு தொடர்ந்து இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இரு நூறுக்கு மேற்பட்ட வாக்குமூலங்களைப் புலானாய்வுப் பொலிஸார் பதிவு செய்துள்ளனர். இவற்றில் பெரும்பாலானவை பொலிஸாரின் வாக்குமூலங்களாகும்.

இவர்கள் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களிடமிருந்தும் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். இதேவேளை விசாரணைகள் முடியும் வரை அப் பகுதியில் இராணுவத்தினரும், விசேட அதிரடிப் படையினரும் சட்டம் ஒழுங்கு என்பவற்றைக் கவனிப்பர்.

கட்டுநாயக்க மோதலில் காயமடைந்த ஊழியரின் மரணம் தொடர்பில் இரண்டு பொலிஸ் உயரதிகாரிகளை நீர்கொழும்பு நீதிவான் 13ஆம் திகதி நாளைவரை விளக்க மறியலில் வைக்கும்படி கட்டளையிட்டார்.

சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களை கட்டுப்படுத்த பொலிஸாரை அனுப்ப வேண்டாமென பாதுகாப்புச் செயலாளர் கட்டளையிட்டிருந்த நிலையில், பொலிஸார் அங்கு எவ்வாறு அனுப்பப்பட்டனர் என்பதை விசாரிக்கும்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிற்கு எதிராக நடந்த போரில் இலங்கையின் உதவியை மறக்கமுடியாது

### நன்றி தெரிவிக்கிறது பாகிஸ்தான்

(கொழும்பு)

**கொழும்பில் இராணுவத் தலைமையகத்துக்குச் சொந்தமான நிலத்தை இரு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்தது தொடர்பாக எந்தக் கணக்கு வழக்கும் அரசாங்கப் பதிவேடுகளில் இல்லை என்றும், இதில் பாரிய முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

(கொழும்பு)

1971இல் இந்தியாவுக்கு எதிரான போரில் பாகிஸ்தானுக்கு எல்லாவிதமான உதவிகளையும் வழங்கியதற்காக இலங்கைக்கு பாகிஸ்தான் நன்றி தெரிவித்துள்ளது.

இந்தியாவின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வந்துள்ள நிலையிலேயே பாகிஸ்தான் நன்றி கூறியுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கை - பாகிஸ்தான் வர்த்தக சபையின் கூட்டத்தில் பேசிய போதே, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் சீமா இலாகி பலோச் இவ்வாறு நன்றி கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய பாகிஸ்தான் தூதுவர் இலாகி பலோச்,

நாங்கள் இலங்கைய்ய நம்புகிறோம். இலங்கை தனது இறைமை விடயத்தில் விட்டுக் கொடுக்காமல் இருப்பதையிட்டு பெருமை கொள்கிறோம்.

எமது பிரதேசத்தில் நிலையான அமைதி ஏற்பட வேண்டும் என்பதை புரிந்து கொள்கிறோம்.

காஷ்மீர் விவகாரம் ஐ.நா. பிரகடனங்களின் அடிப்படையிலும், அங்குள்ள மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலும் அமைதியாகத் தீர்க்கப்பட வேண்டும்.

1971இல் இந்தியாவுக்கு எதிரான போரின்போது இலங்கை செய்த உதவிகளை ஒருபோதும் மறக்க முடியாது.

பாகிஸ்தானில் இருந்து எம்மால் விநியோகங்கள் மற்றும் அரசியல் உதவியை வழங்க முடியாதபோது - இலங்கை உதவ முன்வந்தது.

தனது எரிபொருள் நிரப்பும் வசதிகளை எமக்காகத் திறந்து விட்டது.

இலங்கை மக்களின் அமைதியான வாழ்வுக்கு உதவ பாகிஸ்தான் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## சிறைச்சாலை புலனாய்வு உத்தியோகத்தர் முன்னாள் இராணுவத் தளபதிக்கு பாதுகாப்பு



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களைக் கொண்டு பாதுகாப்பளிக்கப்படுவதாக சிங்கள இணையத்தள செய்தியொன்று தெரிவிக்கின்றது. இதுவரை காலமும் அவர் சாதாரண சிறைக்காவலர்களின் பாதுகாப்பிலேயே வழக்கு விசாரணைகளுக்காக சிறைச்சாலைகளுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். ஆயினும் அண்மைய நாட்கள் தொடக்கம் அவருக்கான பாதுகாப்பு சிறைச்சாலைப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவ்வாறு சரத் பொன்சேகாவுக்குப் பாதுகாப்பு வழங்கும் உத்தியோகத்தர்களின் பெயர் விபரங்களை வாரம் தோறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறும் சிறைச்சாலை அத்தியட்சகர் பணிக்கப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் கருத்து வெளியிட்ட சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர், சரத் பொன்சேகாவின் பாதுகாப்புக் கருதியே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பில் மேலதிக கரிசனையாகவே பாதுகாப்பு அமைச்சிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த தகவல் சமர்ப்பிக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய கரையோர காவற்படை ரோந்து; இலங்கை கடற்படை அத்துமீறுவதில்லை

(கொழும்பு)

இந்தியக் கடற்பரப்பில் இந்திய கரையோர காவல் படையினரின் கப்பல்கள், ரோந்துக் கலங்கள் 24 மணித்தியால ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால், சீன மற்றும் இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறிய நுழைவுகள் இடம் பெறவில்லை என இந்திய கரையோர காவல் படை தெரிவித்துள்ளது.

இந்திய கரையோர காவல்படை இந்தியக் கடற்பரப்பில் 24 மணித்தியால ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இப்படையின் கப்பல்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் கிரமமான கண்காணிப்பு களில் ஈடுபடுகின்றன என மண்டபத்திற்கு அருகிலுள்ள இந்திய கரையோர காவல் படை நிலையத்தின் தளபதி எச். ஹிரிஷ் மோரே கூறினார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு குறித்து அவர் கூறுகையில், இந்திய மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைக் கடந்து செல்லும் போதுமாத்திரமே அத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றன. மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைக் கடக்கக் கூடாது என்றார்.

## தனியார் பல்கலைக்கழகங்களில் இருபது வீதம் புலமைப்பரிசில்



(கொழும்பு)

இலங்கையில் அமைக்கப்படவுள்ள தனியார் பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும்போது அதில் இலங்கை மாணவர்களுக்கு 20 சதவீத புலமைப் பரிசில் வழங்கப்படுமென உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

அது பற்றிய அரச சார்பற்ற தனியார் பல்கலைக்கழக சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இலங்கையில் அமைக்கப்படவுள்ள பல்கலைக்கழகங்களின் மூலம் பாரிய அளவில் அந்நியச் செலாவணியை இலங்கை அரசாங்கம் உழைக்கக் கூடியதாகவும், அத்தோடு இந்நாட்டிலே தகைமை பெறுகின்ற பணமுள்ள பிள்ளைகள் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான தகைமை பெறுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## நடைமுறையிலுள்ள அவசரகாலச்சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை

### என்கிறார் மனிதஉரிமை ஆணையாளர் பிரியந்த பெரேரா

(கொழும்பு)

நாட்டில் அவசரகாலச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என மனித உரிமை ஆணையாளர் நீதிவான் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை கிரமமாக அகற்றுவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும், ஒரே இரவில் சட்டத்தை நீக்கிவிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தின் மூலம் 100 வீதம் துஷ்பிரயோகம் இடம்பெறவில்லை என தம்மால் உறுதிபடக் கூற முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல் தொடர்பிலான பரிந்துரைகளை அமுல்படுத்தக் கூடிய வகையில் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் பொறுப்பு சிரேஷ்ட நீதிவான்களிடம் ஒப்படைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## எதிர்வரும் செப்ரெம்பருக்கு முன்னர் அரிசி ஆலைகள் பதியப்பட வேண்டும்

(கொழும்பு)

செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்படாத சகல அரிசி ஆலைகளையும் தடை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிவர்த்தன தெரிவித்தார்.

1971ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை சட்டத்தின் 10ஆவது பிரிவின் திருத்தத்திற்கு அண்மையில் நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றதாகவும், அதன் பிரகாரம் நாட்டின் சகல அரிசி ஆலைகளையும் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாகும் எனவும் அவர் மேலும் கூறினார்.

அரிசி ஆலைகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் நாளை 13 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழங்க உள்ளதாகவும் அதனைப் பூர்த்தி செய்து செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைத்தல் வேண்டுமெனவும் சுனில் எஸ். சிறிவர்த்தன மேலும் கூறினார். செப்ரெம்பர் 1 இன் பின்னர் பதிவு செயயாது அரிசி ஆலைகளை நடாத்துவது சட்டவிரோதமானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஆங்கில ஆசிரியர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)
நாட்டில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான தட்டுப் பட்டை நிவர்த்தி செய்வதற்கு தற்போது வாய்ப்பு ஏற்பட் டுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித் துள்ளார்.

ஆங்கில ஆசிரியர்கள் 157 பேருக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர், அவர்க ளுக்கான நியமனக் கடிதங் களை வழங்கி வைத்ததுடன், இந்தக் கருத்தையும் தெரிவித் தார்.

இதனிடையே, இந்த நிகழ் வில் பங்குகொண்டு உரையாற் றிய பிரதிக் கல்வி அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா, கஷ்டப் பிரதேசத்திற்கு நிய மனங்களைப் பெற்றவர்கள், குறைந்த பட்சம் ஐந்து வருடங் கள் குறித்த பாடசாலைகளில் பணிபுரிய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கஷ்டப் பிரதேசத்திற்கு நிய மனங்களை பெறுபவர்கள் பின்னர் இடம் மாறிச்செல்ல முனை வதால் அந்தப் பிரதேச மாணவர் கள் கல்வியில் பின்தங்கிய நிலை யிலேயே காணப்படுவதாகவும் பிரதியமைச்சர் சுட்டிக்காட்டினார்.



# பிரிட்டன் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்டது வீழ்ச்சி

(கொழும்பு)
பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த மாதம் வீழ்ச்சிய டைந்துள்ளது. கடந்த மே மாதம் இலங்கைக்கு 48 ஆயிரம் வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கையின் சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே மாதத்தில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை விட 39 சதவீத அதிகரிப்பாகும்.

இந்தியா, ஜப்பான், சீனா, மலேசியா, தாய்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளில் இருந்து இலங் கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது.

ஆனால் கடந்த மாதம் பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 0.4 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. இதுகுறித்து இலங்கை அரசாங்கம் கவலை கொண்டுள்ளதுடன், பிரித்தானிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவடைந்தமைக்கான காரணத்தைக் கண்டறியும் முயற்சியிலும் இறங்கியுள்ளது.

# கடல் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை - பங்களாதேஷ் ஒப்பந்தம்

(கொழும்பு)
பங்களாதேஷ் மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையில் கடல் நடவடிக்கைகள் தொடர்பான சேவை ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்தா னது.

இலங்கையின் சார்பில் துறை முக மற்றும் பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் ரோகித அபே குணவர்த்தன மற்றும் பங்களா தேஷ் சார்பில் அந்த நாட்டின் கடற்சேவைகள் அமைச்சர் சாஜான் கான் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட னர்.

இதன்போது கருத்துரைத்த பிரதியமைச்சர் ரோகித அபே குணவர்த்தன இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான சகோதரத்துவம் வலுப்படுவதாக குறிப்பிட் டார்.

அத்துடன் கடல் போக்கு வரத்து தொடர்பில் இருநாடு களும் இந்த ஒப்பந்தத்தின் ஊடாக நன்மை பெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ்மொழிப் பயிற்சிநெறி ஆரம்பம்

(கொழும்பு)
நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கான தமிழ்மொழி பயிற் சிப் பாடத்திட்டம் நேற்றுமுன் தினம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதி யில் இதன் அங்குரார்ப்பண வைபவம் இடம்பெற்றது.



தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சினால் முன்னெடுக்கப்படும் இந்த தமிழ்மொழிப் பயிற்சிப் பாடத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அதிதியாகக் கலந்துகொண்டார்.

இது தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட முன்னறிவித்த லின் பிரகாரம் தமிழ்மொழி பயிற்சிப் பாடத்திட்டத்திற்காக 30 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஆறு மாதகாலம் கொண்ட இந்தப் பயிற்சி நெறியில், கட்சி பேதங்களின்றி எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினராயி னும் பங்குபற்ற முடியும் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடைபெறுகின்ற சகல வாரங்களிலும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முற் பகல் வேளையில் இரண்டு மணித்தியாலங்கள் இந்தப் பாட நெறி போதிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 15 ஆம் திகதி முழுநிலா கலைவிழா

(பூநகரி)
கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களம் நடாத்தும் ஆனித் திங்கள் முழுநிலாக் கலை விழா எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை பிற் பகல் 2 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் மாகா ணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயப் பாடசாலை மாணவர்க 'ளின் நாட்டிய நாடகம், சிறுவர் அரங்க ஆற்றுகை, பண்பாட்டு ஆற்றுகை, நாட்டுக்கூத்து, நாட்டார் இசை எனப் பல நிகழ் வுகள் அரங்கில் இடம்பெற வுள்ளன. (112)

# அத்தியடிப் பிள்ளையார் மகா கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)
பருத்தித்துறை-அத்தியடிப் பிள்ளையார் கோவிலின் புனர்நிர்மாணப் பணிகள் 2008 இல் ஆரம்பிக்கப்பட்டது.

குறுகிய காலத்திற்குள் பாலஸ் தாபனம் செய்யப்பட்டு, சுண் ணாம்புச்சுவர் கட்டடங்கள் அகற் றப்பட்டு, புதுப்பொலிவுடன் ஆலயம் புனரமைக்கப்பட்டுள் ளது.

அதன் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. கும் பாபிஷேக கிரியைகள் பிரதம குரு சிவனேசக்குருக்கள், சிவஸ்ரீ மதியாபரண குருக்கள் மற்றும் சிவாச்சாரியார்கள் நடத்தி வைக்கிறார்கள்.

# மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு விசேட கடன் திட்டம் அறிமுகம்

(கொழும்பு)
கடற்றொழில் அமைச்சு இலங்கை வங்கியூடாக மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு விசேட கடன் திட்டமொன்றை அறி முகப்படுத்தியுள்ளதாக மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் வி.எஸ்.மெராண்டா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள், தாங்கள் அங்கம் வகிக்கும் மீனவ சங் கங்களின் சிபாரிசுடன் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் குறித்த கடனைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

குறித்த கடன் தொகையா னது 2 இலட்சம் ரூபாய் முதல் 50 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உலர்வடையும் பயிர் நிலங்கள்

(கொழும்பு)
கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பயிர்ச் செய்கை நிலங்கள் உலர்வடைந்து வருகிறது. இதனால் உரிய மண் . பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமென விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இரணைமடு, புதுமுறிப்பு, பரந்தன், தட்டுவன்கொட்டி, உமை யாள்புரம் போன்ற பகுதிகளிலுள்ள வயல் நிலங்கள் உலர்வடைந்து காணப்படுகிறது. இதனால் விவசாயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தென விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

# சிறுமிமீது பாலியல் துஷ்பிரயோகம் சந்தேகநபர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)
தலைமன்னார் பிரதான வீதி சின்னக்கருசல் கிராமத்தில் 11 வயதுடைய சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக கூறப்படும் சந்தேக நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்படும் சிறுமி, வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று மன்னார் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சிறுமி கடந்த வியாழக்கிழமை பாட சாலை முடிவடைந்த நிலையில், வீடு திரும்பிக் கொண்டிருந்த போது குறித்த நபரினால் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில், குறித்த சம்பவம் தொடர் பாக சிறுமியின் பெற்றோர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

# சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி வனவிலங்கு பூங்கா அமைக்கத் திட்டம்

(கொழும்பு)
சுற்றுலாப் பயணிகளின் நலன்கருதி சரணாலயங்கள் சில வற்றை வனவிலங்கு பூங்காக்களாக மாற்றுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவற்றை விரைவில் சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கேற்ப அமைத்து கொடுக்கவுள்ளதாக வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சந்ரவங்ஷ பதிராஜ தெரிவித்தார்.

மடு, கண்டிக்குளம், சோமாவதி, ரன்தெனிகல உள்ளிட்ட சரணா லயங்களை சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்காக திறந்துவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த வனவிலங்கு பூங்காக்களை சுற்றுலாப் பயணிகள் பார்வை யிடுவதற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இந்த வனவிலங்குப் பூங்காக்களைப் பகுதி பகுதியாக மக்கள் பார்வைக் காக திறந்து வைக்க எதிர்பார்த்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

### கிளிநொச்சி மாவட்டத்தின் அவலநிலை

# ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிறுவனங்கள் அவற்றை நிர்மாணிப்பதில் பின்னடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில், கட்டு மானப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்கள் அவற்றை உரிய முறையில் செய்து முடிப்பதில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டட நிர் மாணப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை தென்பகுதி மற்றும் கிழக்கு மாகாண ஒப்பந்தகாரர்களே பெருமளவில் எடுக் கின்றனர். இவ்வாறு ஒப்பந்தங்களை கையிலெடுக்கும் இவர்கள், அந்தக் கட்டட நிர்மாணப் பணிகளை உரிய காலத்தில் செய்து முடிப்பதில்லையெனத் தெரிவிக் கப்படுகிறது.

ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் ஒப் பந்தகாரர்கள், முதலில் கட்டட நிர்மாணப பணிகளை மேற்கொள்வதற்கு வழங் கப்படும் முற்பணத்தைப் பெறுவதிலேயே குறியாக உள்ளதாகவும், இதன் பின்னர் மாவட்டத்திலேயே உதவி ஒப்பந்தகாரர் ஒருவரிடம் தமது வேலையை கொடுப்ப தற்கு தேடித் திரிவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதனால் மாவட்டத்தில் உரிய காலத் தில் முடிக்கப்பட வேண்டிய நிர்மாணப் பணிகள், காலதாமதமாகி வருவதுடன், வீண் அசௌகரியங்களுக்கும் ஆளாக வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

பூநகரி தலைமைச் செயலகக் கட்ட டத்தைத் தென்பகுதி ஒப்பந்த நிறுவன மொன்று பெருந்தொகை நிதியில் ஒப் பந்தமெடுத்து நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வந்த நிலையில், தற்போது அங்கு சொற்ப அளவிலான வேலைகளே உள்ள நிலையில், அதனைச் செய்து முடிப பதற்கு, குறித்த நிறுவனம் பின்னடித்து வருகின்றது. இதனால் சங்கத் தலைமை யகம் தொடர்ந்தும் ஜெயபுரத்தில் இயஙக வேண்டிய நிலையிலேயே உள்ளது.

எனவே இந்த ஒப்பந்தகாரர்களின் செயற்பாடுகள் தொடர்பாக உரிய தரப் பினர் கவனமெடுக்க வேண்டுமெனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# முட்டை விலையில் துரித வீழ்ச்சி

(கொழும்பு)

சந்தையில் முட்டையின் விலையில் துரித வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை கோழி வர்த்தகர்களின் சங்கம் தெரிவிக்கின்றது.

கடந்த காலத்தில் முட்டைக்கான கேள்வி சந்தையில் வீழ்ச்சியடைந்தமையே இதற் குக் காரணமாக அமைந்துள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் கலாநிதி டி.டி.வனசிங்க கூறினார்.

மக்களிடையே முட்டையின் நுகர்வு குறை வடைந்துள்ளதாலும், மழைக் காலங்களில சிறிய ரக மீன்கள் சந்தையில் அதிகமாக காணப்படுவதாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் முட்டையின் கையிருப்பு அதிகளவில் காணப்படுவதால் விலையி லும் வீழ்ச்சி ஏற்படுவதாக கோழி வர்த் தகர்கள் சங்கம் குறிப்பிடுகின்றது.

இன்னும் ஓரிரு வாரங்களில் இந்த நிலைமை வழமைக்குத் திரும்பலாம் என நம்பிக்கை வெளியிட்ட கலாநிதி டி.டி. வனசிங்க, தற்போதைய சந்தை நிலை மையின் கீழ் முட்டையொன்று ஒன்பது அல்லது 10 ரூபாவுக்கு விற்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# அச்செழு பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டிற்கு அண்மையில் கல விச் சுற்றுலாவை மேற்கொண்டு வருகை தந்த கண்டி-பொறமடுல்ல மத்திய கல் லூரியின் உயர்தரப் பிரிவு மாணவர்கள அச்செழு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங் களை வழங்கினர்.

உயர்தரப் பிரிவில் கல்வி பயிலும் 57 மாணவர்கள் கல்லூரியின் பிரதி அதிபர் ஐ.எ.விமலரட்ண மற்றும் ஆறு உதவி ஆசிரியர்கள் சகிதம குடாநாட் டிற்கான கல்விச் சுற்றுலாவை அண்மை யில் மேற்கொண்டனர். இவ்வாறு வருகை தந்த இவர்கள் அச்செழு மெதடிஸ்த மிஷன தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களுக்கு பயிற்சிப் புத்தகங்கள், பேனை, பென்சில், சீருடைத் துணிகள், சப்பாத்து போன்ற கற்றல் உபகரணங்களை வழங்கினர். அத்துடன் அலு வலகப் பயன்பாட்டிற்கான சில பொருட்களையும் அவர்கள் வழங்கிச் சென்றனர்.

# ஊருக்குள் புகும் யானைகள் பயிர்களை நாசம் செய்கின்றன

(நெடுங்கேணி)

மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வவுனியா வடக்குப் பகுதியில் யானை களின் தொல்லை அதிகரித்துள்ளதனால் அச்சத்துடனேயே இரவு வாழ்க்கையை கழிக்க வேண்டியுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வவுனியா வடக்கிலுள்ள நெடுங்கேணி, நயினாமடு போன்ற பகுதிகளில் இரவு நேரங்களில் கூட்டம் கூட்டமாக வரும் யானை கள் அங்கு மக்களால் பயிரிடப்பட்டுள்ள வாழை, கத்தரி, வெண்டி உட்படப் பல் வேறு பயிர்களை நாசம் செய்துவிட்டுச் செல்கின்றன.

கடந்தகால போர் நடவடிக்கை கார ணமாக அனைத்தையும் இழந்த நிலை யில் தற்போது மீள்குடியேறிய, தாம் மீள வும் தமது விவசாயச் செய்கையை ஆரம் பித்துள்ள நிலையில் யானைகள் பயிர் களை நாசம் செய்வது கவலையளிப்ப தாக உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

யானைகள் பயிர்களை நாசம் செய்வ தைத் தவிர்க்கும் வகையில் அப்பகுதி மக்கள் இரவு நேரங்களில் தமது பயிர்ச் செய்கை நிலங்களில் காவல் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# அதிகரித்த விலையில் விவசாய உள்ளீடுகள்; அதிகாரிகளை கவனமெடுக்கக் கோரிக்கை

(அளவெட்டி)

அளவெட்டி-ஓமான் கடை சந்திப் பகுதியில் அமைந்துள்ள விவசாய உள் ளீடுகள் விற்பனை செய்யும் வியாபார நிலையத்தில், அதிகரித்த விலையில் உள ளீட்டுப் பொருட்கள் விற்பனை செய்யப் படுவதாக விவசாயிகள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

அளவெட்டிப் பகுதியில் பெருமளவு விவசாயிகள் விவசாயச் செய்கையில் ஈடுபட்டு வரும் நிலையில், குறித்த வியா பார நிலையத்தில் அதிகரித்த விலையில் உள்ளீட்டுப் பொருட்கள் விற்பனை செய் யப்படுவது குறித்தே விவசாயிகள் விச னம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக களையைக் கட்டுப்படுத் தும் கோல் எனும் 8 அவுன்ஸ் மருந்து சுன னாகத்தில் 960 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் அதேவேளை, மேற்குறித்த வியாபார நிலையத்தில் அதே மருந்து 1050 ரூபாவிற்கு அதாவது, 90 ரூபா விற்கு அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இவ்வாறே ஏனைய உள்ளீட்டுப் பொருட்களும் அதிகரித்த விலையில் விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந்த அதிகரித்த விலை தொடர் பாக விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் பலரும் தெரிவிக்கின்றனர்.

# அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

வளலாய் கிராமசேவையாளர் பிரி வில் கிராம அபிவிருத்திச் சங்கம், கிராம சேவையாளர் நா.மதனசேகரம் தலைமை யில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

தலைவராக வை.கந்தசாமியும், உப தலைவராக செ.சுத்னும், உபதலைவராக சி.செல்வரத்தினமும், உப செயலாளராக ச.ஞானரூபனும், பொருளாளராக இ.கந்த சாமியும் கணக்காய்வாளராக க.குமரகுரு லிங்கமும் மற்றும் ஒன்பது பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# சான்றிதழ் வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு யுனிவேக் கணினி நிலையத்தில் அடிப்படை கணினிப் பயிற் சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன் தினம் நிலையத்தில் நடைபெற்றது.

ஆசிரியர் சுதர்சன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர் அல்பேட், முல்லைத்தீவு மாவட்ட பங்குத் தந்தை மற்றும் மணற்குடியிருப்பு பிரதேச கிராம அலுவலர்களும் கலந்துகொண்டனர். (40)

# புதிய மைதானம் அமைப்பதற்கான பணி அரியாலையில் வைபவ ரீதியாக ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக்கிற்கு யாழ். கண்டி வீதியில், அரியாலைப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ள இரண்டு மாடிக்கட்ட டத்துடனான புதிய விளையாட்டு மைதான அமைப்பிற்கான ஆரம்பப் பணிகளை பாரம் பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர் ஜென்ஸ் புளெட்னர் ஆகியோர் நேற்று வைபவரீதியாக ஆரம் பித்து வைத்தனர்.

சர்வதேச கால்பந்தாட்டக் குழுவின் சம் மேளன நிறைவேற்றுக் குழுவைச் சேர்ந்த ஊடக இணைப்பாளர் நக்மல் பெரேரா தலை மையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சம் மேளன நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர் மணிலன் பெர்னாண்டோ, இலங்கை கால்பந் தாட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுத் தலைவர் சரத் வீரசேகரா, யாழ். உதைபந் தாட்ட லீக்கின் தலைவர் அன்ரனிப்பிள்ளை, யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அன்ரனிப்பிள்ளை, சரத் வீரசேகரா, ஜென்ஸ் புளெட்னர் மற்றும் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா ஆகியோர் உரையாற்றி னர். தொடர்ந்து மைதானம் அமைக்கும் பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், 30 வருடங்களுக்கு முன் னர் கால்பந்தாட்டத்தில் இருந்த சிறப்புத் தன்மையை மீண்டும் கொண்டு வருவதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்ய தாம் தயாராக இருப்பதாகவும், நாட்டில் ஏற்பட்ட போராட்டச் சூழல்நிலை காரணமாக கால் பந்துகளுடன் விளையாடியவர்கள் கைகளி லேயே குண்டுகளை ஏந்திப் போராடி வந்த னர். எனினும் ஜனாதிபதியின் சிறந்த தலை மைத்துவத்தின் மூலம் அந்நிலை மாற்றப் பட்டு நல்லதோர் சூழ்நிலை பிறந்திருக்கின் றது. யாழ்.மாவட்டம் உதைபந்தாட்டத்துறை யில் முன்பிருந்த நிலையை எட்டத் தம்மா லான நடவடிக்கைகளை மேற்கொள்ள வுள்ளதாகவும், அதன் ஆரம்ப நடவடிக்கையே இதுவெனவும் தெரிவித்தார். (பா)

# புதிய மனிதன்

ஊனம் ஊனம் ஊனம் ஊனம் இங்கே ஊனம் யாருங்கோ உடம்பில் உள்ள குறைகள் எல்லாம் ஊனம் இல்லேங்கோ என்ற பாடல் இங்கு காட்டப்பட்டுள்ள படத்திற்கு மிகவும் பொருத்த மானதாகத்தான் இருக்கின்றது. 1982ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி அவுஸ்ரேலியவில் பிறந்த நிக் என்பவர் பிறக்கும் போதே கை மற்றும் கால்கள் இல்லாமல் தான் பிறந்திருக்கிறார்.

அந்த இரண்டு உறுப்புக்களும் இல்லாத குறையை இவர் பெரிதாக கருத்தில் கொள்ளவில்லை. இருந்தாலும், தன்னைச் சுற்றியிருப்பவர்களுடன் மிகவும் சந்தோசமாக தனது வாழ்நாளைக் கழித்து வருகின்றார். இவருடைய அங்க உறுப்புக்கள் இல்லாமல் போனதற்கான காரணத்தை இன்னும் மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லையாம். நிக் அவருடைய பெற்றோருக்கு முதல் பிள்ளை. இவருக்குபின் பிறந்த இவருடைய சகோதரி மற்றும் சகோதரன் இருவரும் மற்ற குழந்தைகளை போல நன்றாகத் தான் உள்ளார்களாம். உலகில் கடவுளால் படைக்கப்பட்ட ஒரு புதிய மனிதராக இவர் இந்த உலகத்தில் வாழ்ந்து வருகின்றார்.



# சின்ன ஆசைகள்




புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள அலிஸா என்ற 15 வயதுச் சிறுமி, தான் மரணிப்பதற்கு முன் செய்ய வேண்டிய காரியங்களைப் பட்டியலிட்டுள்ளார்.இரத்தத்தில் வெண்குருதி துணிக்கைகளைப் பாதிக்கும Hodgkins lymphoma என்ற புற்றுநோயால் இவர் கடந்த நான்கு ஆண்டுகளாகக் கஷ்டப்படுகின்றார். அல்வர்ஸ்டன் கம்ப்ரியா பகுதியைச் சேர்ந்த இவர் தனது முழு நேரப் பணி புற்றுநோயை எதிர்த்துப் போராடுவது என்றும் தனது இணையத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது ஆசைகளை புளொக் இணையத்தளத்தில் போவதற்கு முன் செய்ய வேண்டியவை என்று அவர் இந்தக் காரியங்களைப் பட்டியல் இட்டுள்ளார். இந்த நோயை வெல்ல முடியும் என்று நான் நினைக்கவில்லை. புற்றுநோய் எனது உடல் முழுவதும் பரவிக் கொண்டிருக்கின்றது. இதினால் நான் வாழ்நாளில் விரும்பி ஆசைப்பட்ட விடயங்களை இங்கு பகிந்து கொள்ள விரும்புகின்றேன் என்று அவர் எழுதியுள்ளார். அதாவது திமிங்கிலங்களைப் பார்வையிடுவது, அவற்றோடு நீந்துவது, தனது நாய் மாபெல்லுடன் ஒரு காட்சியில் கலந்து கொள்வது, வயிறு நிறைய சொக்கலேட் உண்ணுவதற்காக கெட்பரி வேல்ட்டுக்கு விஜயம் செய்வது என்று பல விடயங்களை அவர் இதில் தெரிவித்துள்ளார். தான் வெளியிட்டுள்ள பட்டியல் இன்னும் பூர்த்தி அடையவில்லை என்றும், அவ்வப்போது நினைவுக்கு வரும் இன்னும் பல விடயங்களையும் தொடர்ந்து அதில் சேர்க்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# புகைப்படங்களின் அளவை மாற்ற...

நம்கமெரா மூலம் எடுத்த புகைப்படங்களின் அளவை தகுந்த அளவு மாற்றுவதற்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது. நம்மிடம் இருக்கும் புகைப்படங்கள் அல்லது நாம் கமெரா மூலம் எடுத்த புகைப படங்ளின் நீள அகலங்களை மாற்றுவதற்காக இனி எந்தப் பெரிய மென்பொருளும் தேவையில்லை. சில நிமிடங்களில் அதுவும் எளிதாக நம் புகைப் படங்களை சிறியதாக்கவும் பெரியதாக்கவும் மாற்ற நமக்கு ஒரு இணையத்தளம் உள்ளது. முதலில் கீழே இந்த http://www.picresize.com/ கொடுக்கப்பட்டிருக்கும் இணையதள முகவரி சுட்டியை சொடுக்கி குறிப்பிட்ட தளத்திற்கு செல்ல வேண்டும் நமக்கு தேவையான புகைப்படத்தை Browse என்ற பட்டனை சொடுக்கி தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். பின் தோன்றும் விண்டோவில் நமக்கு தேவையான மாற்றங்களை செய்த பின்னர் புகைப் படத்தை கணினியில் சேமித்துக் கொள்ளலாம்.

# தமிழில் இன்ரநெற் எக்ஸ்புளோரர்




மைக்ரோசாப்ட் நிறுவனம் தன் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9ஐ தமிழ் மொழியில் வெளியிட்டுள்ளது. ஏற்கனவே இந்தி மொழியில் வெளியிட்டிருந்த நிலையில் அண்மையில் மேலும் 53 மொழிகளில் தன் பிரவுசரை வடிவமைத்துத் தந்துள்ளது. இவற்றில் தமிழ், அசாமீஸ், வங்காள மொழி, குஜராத்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒரியா, பஞ்சாபி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகள் அடங்குகின்றன. பல்வேறான மொழிகளில் தன் பிரவுசரை வெளியிட்டதன் மூலம் அனைத்து தரப்பு மக்களிடம் தன் சாதனங்களை மைக்ரோசாப்ட் கொண்டு செல்லும் முயற்சியில் வெற்றி பெறும் வாய்ப்புகள் அதிகரிக்கிறது. பிரவுசர் போட்டியில் மற்ற பிரவுசர்களை முந்திச் செல்ல இது கை கொடுக்கும் என மைக்ரோசாப்ட் எண்ணுகிறது. இந்த பிரவுசர் வெளியான போது மைக்ரோசாப்ட் இந்தியாவில் பிரபலமான 29 இணைய தளங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டிருந்தது. இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 9ஐ பிரபலப்படுத்த இந்த ஒப்பந்தம் வழி வகுக்கிறது. தமிழ் மற்றும் பிற மொழிகளில் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரை உங்கள் கணினியில் இயக்க http://windows.microsoft.com/en-US/internet-explorer/downloads/ie-9/worldwide-languages என்ற முகவரிக்குச் சென்று அங்கிருந்து இலவசமாகத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

# மரக் கணினி




மரத்தினால் செய்யப்பட்ட பல விதமான பொருட்களைப் பார்த்திருக்கிறோம். மர வீடுகள் மரத்தினால் வடிவமைக்கபட்ட சிற்பங்கள், மரத்தினால் செய்யுப்பட்ட தளபாடங்கள் போன்றவற்றை நம் தளத்தில் பார்த்திருக்கிறோம். ஆனால் இந்த கணிப்பொறி சற்று வித்தியாசமானது. ஒரு கலைஞனின் கலைஞானம் இந்தப் பொருட்களில் வெளிப்பட்டிருக்கின்றது. முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை என்பதற்கு இந்தப் பொருட்கள் ஆதாரம்.




# அணுகுண்டின் தாக்கம் இப்போதும்...

ஹிரோஷிமா, நாகசாகி அனுகுண்டு வெடிப்பிற்கு பின் அங்கு பிறந்த குழந்தைகள் ஊனமாகப் பிறந்தார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம் தான். அப்படி பிறந்த சில குழந்தைகள்.



## மத்திய அமைச்சரவையை மாற்றியமைக்கிறார் பிரதமர்



(புது டில்லி)

மத்திய அமைச்சரவையை மாற்றியமைக்க பிரதமர் மன்மோகன்சிங் முடிவு செய்துள்ளார். மத்திய அமைச்சர்கள் வெளிநாடு செல்வதை தவிர்க்க வேண்டும் என்று பிரதமர் அலுவலகம் அறிவுறுத்தி உள்ளது. மத்திய அமைச்சரவையிலும், காங்கிரஸ் கட்சியிலும் சில மாற்றங்களை கொண்டு வருவது தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியா, பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் சில நாட்களாக விவாதித்து வருகின்றனர். அதனடிப்படையில் விரைவில் சில மாற்றங்களை கொண்டு வருவது என அவர்கள் முடிவுக்கு வந்துள்ளனர்.

மத்திய ரயில்வே அமைச்சராக இருந்த மம்தா பானர்ஜி மேற்கு வங்க முதல்வராக பொறுப்பேற்றுள்ளார். அவர் வகித்த ரயில்வே அமைச்சகத்துக்கு ஓர் அமைச்சரை நியமிக்க வேண்டும். அந்தப் பதவி மம்தாவின் திரிணாமுல் காங்கிரசுக்கு கிடைக்கும் என்பது உறுதியாகி விட்டது. அது மட்டுமின்றி, சில அமைச்சர்களின் பதவிகளைப் பறிக்க பிரதமர் தீர்மானித்துள்ளதாக தெரிகிறது.

இத்தகைய பின்னணியில் மத்திய அமைச்சர்கள் வெளிநாடு செல்வதை தவிர்க்க வேண்டும் என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. 2 ஜி அலைக்கற்றை விவகாரத்தில் ஜவுளித்துறை அமைச்சர் தயாநிதி மாறன் சிக்கியுள்ளதைத் தொடர்ந்து அவர் தானாகவே பதவி விலகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர் விலகாவிட்டால் பதவியில் இருந்து அவர் நீக்கப்படலாம் என்றும் டில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க. வெளியேற மாட்டாது




(சென்னை)

தேர்தலில் தோல்வி, அடுத்தடுத்து கைதுகள், ஊழல் புகார்கள் என் தி.மு.க விற்கும் காங்கிரசுக்குமான உறவில் விரிசல் இருக்கலாம். தி.மு.க, காங்கிரஸ் கூட்டணியை விட்டு வெளியேறி விடும் என்று பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தி.மு.க வின் உயர் நிலைச் செயற்குழு கூடம் நேற்று முன்தினம் மாலை அண்ணா அறிவாலயத்தில் நடந்தது.

கட்சியினரின் பல தரப்பட்ட கருத்துக்களையும் கேட்ட பின்னர் சில பல தீர்மானங்களோடு முடிந்து போனது தி.மு.க வின் உயர்நிலைக் கூட்டம்.அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி காங்கிரஸ் கூட்டணியில் இருந்தும் மத்திய அமைச்சரவையில் இருந்தும் தி.மு.க வெளியேறாது. ஆனால் சி.பி.ஐ தொடர்ந்துள்ள வழக்குகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படும் உள்ளிட்ட சில தீர்மானங்களோடு தமிழக அரசின் சமச்சீர் கல்வி தொடர்பாகவும் சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது தி.மு.க.

# இலங்கைத் தமிழரைக் காட்டிக்கொடுத்த ஜெயலலிதாவின் செயலை அம்பலமாக்குவோம்

## தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்

(சென்னை)

இலங்கைத் தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த ஜெயலலிதாவின் செயலை நாட்டிற்கு காட்டுவோமென தி.மு.க.செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

8.6.2011 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் இலங்கையில் போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களை போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டுமென்றும், தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி, சிங்களவர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ்ந்திட அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் அனைவரும் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், கேட்டுக் கொண்டு முதலமைச்சரால் கொண்டுவரப்பட்ட அரசினரின் தனித் தீர்மானத்தை திராவிட முன்னேற்ற கழகம் முழு மனதோடு ஆதரிக்கிறது.



தமிழகச் சட்டப்பேரவையில் 16.04.2002 அன்று இதே ஜெயலலிதா முதலமைச்சராக இருந்போது, கொண்டு வந்த தீர்மானத்தில் புலிகளின் தலைவரான பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து, இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும், தடை செய்யப்பட்ட புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒருவரையும் இந்தியாவிற் குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்று கூறியதையும், 17.1.2009 அன்று இதே ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை இராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் - ஒரு போர்

நடக்கும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள். இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு செல்லவிடாமல் புலிகள் அவர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு வலுக்கட்டாயமாக, இராணுவத்தின் முன்னால் அவர்களை ஒரு கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டதையும் எடுத்துக்காட்டி, இலங்கை தமிழ் இனத்தைக் காட்டிக் கொடுத்த இழிசெயல், பழிச்செயல் புரிந்தவர்கள் தற்போது தமிழ் இனத்தை எதையும் சொல்லி எல்லாக் காலத்திலும் ஏமாற்றலாம் என்ற மனப்பான்மையோடு இப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள் என்பதை இந்த உயர்நிலைச் செயல் திட்டக் குழு தமிழ் உலகத்திற்குச் சுட்டிக்காட்டி நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

# இலங்கைத் தமிழர் அமைதியாக வாழ இறைவனை வேண்டும் நடிகர் விஜய்

(சென்னை)

இலங்கைத் தமிழர்கள் அமைதியோடும், உரிமைகளோடும் வாழ இறைவனை வேண்டிக்கொள்கிறேன் என்று நடிகர் விஜய் கூறியுள்ளார்.


இதுதொடர்பாக நடிகர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்து போர்க் குற்றம் புரிந்ததாக ஐ.நா. சபையால் போர்க் குற்றவாளி என்று அடையாளம் காட்டப்பட்டவர்களுக்கு தண்டனை வாங்கித்தரவேண்டும் மற்றும் இலங்கை தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதகம் விளைவித்த இலங்கை அரசுக்கு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்றும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



உரிமைகளையும், உடைமைகளையும், உறவுகளையும் இழந்து பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து கொண டிருக்கும் தமிழ் மக்களுக்கு இது ஆறுதலான விடயம். இனி வரும் காலங்களில் இலங்கை தமிழர்கள் அமைதி யோடும்,சந்தோஷத்தோடும் சமமான உரிமைகளோடும் வாழ வேண்டும். அதற்காக இறைவனை வேண்டிக்கொள்கிறேன். இவ்வாறு நடிகர் விஜய் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தேசிய முற்போக்கு திராவிட கழகத்தை அங்கீகரித்துள்ளது தேர்தல் ஆணையம்



(சென்னை)

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தை தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ளதாக அந்தக்கட்சியின் நிறுவனத் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் 19.5.2011 அன்று தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் சார்பில் டில்லியில் உள்ள தேர்தல் ஆணையத்திற்கு அங்கீகாரம் கோரி கடிதம் அனுப்பப்பட்டது. நடந்து முடிந்த தேர்தலில் 41 இடங்களில் போட்டியிட்டு 29 இடங்களில் வெற்றி பெற்றதையும், சுமார் 30 இலட்சம் வாக்குகள் பெற்றதையும் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டது. 1968ஆம் ஆண்டு தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு மற்றும் ஒப்படைப்பு ஆணையின்படி ஒரு மாநிலக் கட்சி அங்கீகாரம் பெறுவதற்குரிய தகுதிகளை தே.மு.தி.க பெற்றுள்ளதால் இந்த அங்கீகாரம் கோரப்பட்டது. இந்தியத தேர்தல் ஆணையம் அந்த கடிதத்தை முறையாகப் பரிசீலித்து தே.மு.தி கவுக்கு அங்கீகாரம் வழங்கி 10.ஆம் திகதி அன்று ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி தே மு தி க தமிழ்நாட்டில் அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சியாகவும், அதற்கு முரசு சின்னம் நிரந்தரமாக ஒதுக்கப் பட்டுள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் கழகத் தொண்டர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்வதாக விஜயகாந்த் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்

## பரிசுத்த ஆவியின் திருநாள்




படைப்பதும் புதுப்படைப்பாக்குவதும் தூய ஆவியின் செயல். ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாக்குவது படைப்பு. இறைவன் உலகைப் படைத்த போது, ஒன்றுமில்லாமையிலிருந்து, வெறுமையிலிருந்து (தொடக்க நூல் 1:1) அசைந்தாடிய ஆவியின் ஆற்றலால் அனைத்தையும் படைத்தார். அவ்வாரே தம் உயிர் மூச்சை ஊதி மனிதனைப் படைக்கிறார். இவ்வாறு தூய ஆவியின் செயல்பாட்டால் படைப்புகள் ஊண்டாகின.

மனிதன் பாவம் செய்த பின் அதே தூய ஆவி, அவன் மீது செயற்படும்போதும், அவன் மீது ஊதப்படும்போதும் அவன் புதிதாகப் படைக்கப்படுகிறான். பேயை விரட்டும் போதும், நோயைப் போக்கும்போதும், பாவத்தை மன்னிக்கும் போதும், அர்ச்சிக்கும் போதும், அருள் வாழ்வுக்கு அழைக்கும் போதும், தூய ஆவி செயற்படுவதால், மனிதன், தன் உடலிலும் உள்ளத்திலும் மாற்றம் பெறுகிறான். தூய ஆவி அவனைப் புது படைப்பாக்குகிறார்.

இவ்வாறு புதுப்படைப்பாக்கப்படும்போதெல்லாம் மனிதனின் பாவங்கள் கழுவப்படுகின்றன. பாவ மன்னிப்பு கொடுத்து புதுப்படைப்பாக்கும் அருளை, திருத்தூதர்களுக்கும் அவர்கள் வழியாகத் திருச்சபைக்கும் தூய ஆவியார் வழங்குகிறார். திருட்சபை வழங்கும் ஒவ்வொரு திருவருட்சாதனத்திலும் தூய ஆவி நம் மீது பொழியப்படுவதால், நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன நாம் புதுப் படைப்பாகிறோம். புதுப்படைப் பாகும் நம்மில் “உங்களுக்கு அமைதி உரித்தாகுக” என்னும் வாழ்த்து முழுமையாகக் கிடைக்கிறது. தூய ஆவி தரும் இக்கொடைகளைப் பெற்று மகிழ்ந்து இனிது வாழ்வோம்...

**அலெக்ஸ்சாண்டர்**
**(மறை ஆசிரியர்)**

# அப்பாவி இளைஞரைத் தாக்கியபின் பாகிஸ்தான் இராணுவம் சுட்டுக்கொன்றது

## சம்பவம் ஒளிபரப்பானதால் அங்கு பரபரப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் அப்பாவி இளைஞன் ஒருவரை பரா மிலிட்டரி படையினர் கொடூரமாகத் தாக்கி, துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். இதனை அந்நாட்டு ரி.வி. சனல் ஒன்று நேரடியாக ஒளிபரப்பியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்து பிரதமர் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் கராச்சி நகரில், சிந்து மாகாணத்தைச் சேர்ந்த ரேஞ்சர் எனும் பிரிவைச் சேர்ந்த பரா மிலிட்டரி படையினர் ஒரு இளைஞனை பிடித்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அவரது பெயர் ஷர்பராஸ் ஷகா என்பதும் கொள்ளையடிக்கும் திட்டத்தில் நடமாடியதாக கூறப்பட்டது.

உலகச் செய்திகள்

உடனே அந்த இளைஞனை தீவிர விசாரணை நடத்தாமல் கொடூரமாக தாக்கியுள்ளனர். பின்னர் ஒரு இராணுவச் சிப்பாய் துப்பாக்கியால் அந்த இளைஞனின் மார்பில் அருகே வைத்து சுட்டுககொன்றார். இரண்டு முறை துப்பாக்கியால் சுட்டதாக கூறப்படுகிறது.. இந்த கொடூர சம்பவத்தினை அந்நாட்டு தனியார் தொலைக்காட்சி ஒன்று நேரடி இணைப்பு மூலம் நேரடியாக ஒளிபரப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

இராணுவத்தினர் பிடிக்கப்பட்ட போது அந்த இளைஞன் அவர்களிடம் சுட வேண்டாம் என கெஞ்சியுள்ளார். நாடு முழுவதும் இந்த வீடியோ காட்சிகள் அனைத்து தொலைக்காட்சிகளிலும் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பானதால் பரபரப்பு நிலவியது. இந்தச் சம்பவம் குறித்து பாகிஸ்தானின் எதிர்க்கட்சிகள், பல்வேறு மனித உரிமை அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்தன. தற்போது பாகிஸ்தானில் நாடாளுமன்றக் கூட்டம் நடந்து வருகிறது. இதில் எதிர்க்கட்சிகள் வீடியோ காட்சி குறித்து சம்பந்தபட்ட வர்களைக் கைது செய்ய வலியுறுத்தினர். இது குறித்து பிரதமர் யுசுப்ராஸா கிலானி இந்த சம்பவம் குறித்து பயங்கரவாத எதிர்ப்பு கோர்டில் விசாரணை நடத்தி 30 நாட்களுக்குள் முடிவினை அறிவிக்கும் என தெரிவித்தார்.

# பொட்டுக்கேட்டை மறைக்க....

(14ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஒவ்வொரு சமூகத்திலும் புத்திஜீவிகள் இருக்கிறார்கள். இவ்வாறான அழிவுகளின போது முதலில் மௌனம் கலைப்பது அவர்கள்தான். தங்களுடைய சமூகம் இந்த இழிநிலைக்கு வந்த காரணம் என்ன என்பதை ஆராய்வது அவர்கள்தான்.

எங்கள் சமூகத்திலிருந்த புத்திஜீவிகள் எங்கே போய் விட்டார்கள்? எங்கள் சமூகத்தில் படித்தவர்கள் இருந்தார்களே தவிர, சிந்தனையாளர்கள் இருந்ததில்லை. 'மந்தைப் புத்தி' ஜீவிகள்தான் எங்கள் இனத்தில் இருக்கிறார்கள். கோழி மேய்த்தாலும் கொர்ணமெந்தில மேய்க்க வேணும் என்பதற்காக பல்கலைக்கழகம் போனவர்கள் இவர்கள். இவர்களின் சிந்தனை எந்த விதத்திலும் வளர்ச்சியடைந்ததில்லை. பல்கலைக்கழகம் போனவர்கள் கூட அதைக் காட்டி சீதனம் வாங்குவதிலேயே குறியாக இருந்தார்கள்.

எமது சமூகம் மாற்றுச் சிந்தனையாளனை அங்கீகரித்ததில்லை. அவனை மட்டம் தட்டுவதிலேயே கண்ணாயிருந்தது. தனித்துவத்தை ஜீரணிக்க முடியாத கூட்டம் இது.

இந்த சாம்பலிலிருந்து எழுந்த பீனிக்ஸ் புலி என்ன செய்யும்? தமிழில் அரசியல் பிரக்ஞை, சமூகப் பிரக்ஞை உள்ள எல்லாரையும் போட்டுத் தள்ளியது. சிந்திக்கத் தெரிந்தவர்கள் மண்டியிட வைக்கப் பட்டார்கள். Character assassination செய்யப்பட்டு அவமானத்தால் மனம் வெதும்பி வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டார்கள், கொல்லப்பட்டார்கள்.

உலக நாடுகளிலெல்லாம் முற்போக்குச் சிந்தனை கொண்ட பல்கலைக் கழகங்கள் போல இல்லாமல் தமிழ்த் தேசியக் குட்டையில் மட்டைகளை ஊறப்போட்டுக் கொண்டிருந்தது யாழ் பல்கலைக் கழகம். மத அமைப்புகள், இலக்கிய அமைப்புகள், ஊடகங்கள், பத்திரிகையாளர்கள் என எலலாம் புலிகளால் மண்டியிட வைககப்பட்டன, ஊதுகுழல்களாக்கப்பட்டன, முடியாதவை நிர்மூலமாக் கப்பட்டன.

மற்ற இயக்கங்கள், கட்சிகளில் இருந்த சிந்திக்கத் தெரிந்தவர்கள் புலிகளால் விசேடமாகக் குறி வைக்கப் பட்டார்கள்.

திட்டமிட்டு புலிகளால் இந்த இனத்தின் சிந்தனை எழுச்சி மழுங்கடிக்கப்பட்டது. மிஞ்சியது யார்? பதவிகளுக்காகவும், தங்கள் சமூக விரோதச் செயல்களுக்குப் பாதுகாப்புத் தேடுவதற்காகவும் புலிகளோடு ஒட்டிக் கொண்டவர்கள்தான் மிஞ்சினார்கள்.

சிந்தனை எழுச்சி எப்படி வரும்? ஆன்மாவுக்கான தேடல் எப்படி வரும?

தென்னாபிரிக்காவில் Truth and reconciliation என்று உண்மையை அறிந்து பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் முயற்சி போல, எங்கள் மண்ணில் எப்படி வரும்?

அப்படி ஒன்று வந்தால், புலிகளால் மக்களுக்கு இழைக்கப்பட்ட அக்கிரமமும் அட்டூழியமும் அநியாயமும் அம்பலத்திற்கு வந்துவிடும். அதன் பைனான்சியர்கள் யார் என்ற உண்மை வெளியில் வந்து விடும்.

இப்படியாக இத்தனை அழிவுகளுக்கு உள்ளாகிய பின்பும், தன்னுடைய யாழ்ப்பாண மனோபாவத்தை அழிக்க மறுத்துக் கொண்டிருக்கிறது இந்த இனம்.

ஒருபோதுமே தங்களின் தவறை உணர்ந்து திருந்தும் பழக்கம் இந்த சமூகத்திற்கு கிடையாது.

இப்போது கேட்கிறார்கள்... அவங்கள் இப்ப இல்லை, பிறகென்னத்துக்கு பழசுகளைக் கிளறுறியள்?


சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர். தலைவரும் புலிகளும் புனிதமானவர்கள், விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்று மூடி மறைக்கவே இந்த சமூகம் இன்றும் முனைகிறது.

பிரச்சினைகளை மூடி மறைத்தே பழக்கப்பட்டவர்கள் நாங்கள். காதல் வந்தால் கூட, உணர்ச்சிகளை அடக்கி, குடும்பத்திற்கு பயந்து, கௌரவத்திற்காக கலியாணம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் சமூகத்திலிருந்து வந்தவர்கள் நாங்கள். உணர்ச்சிகளை அடக்கி, மற்றவர்களின் விருப்புகளுக்கும் வெறுப்புகளுக்குமாக வாழ வேண்டும் என்று நிர்ப்பந்திக்கும் இனத்தி லிருந்து வந்தவர்கள் நாங்கள். எதையும் திறந்த மனதோடு எதிர்கொண்டும் விவாதிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்காத பரம்பரையினர் நாங்கள். பிழையையும் உண்மையையும் ஏற்றுக் கொள்ளாமல் விதண்டாவாதம் பண்ணி அதகடிக்கும் பழக்கம் கொண்டவர்கள் நாங்கள். பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்காமல், பேசாமல் விடுவதன் மூலம் பிரச்சினைக்கான காரணத்தை, அதில் எங்களுடைய பங்களிப் பை மூடி மறைக்கலாம் என்று பாசாங்கு பண்ணிக் கொண்டிருக்கிறோம்.

புலிகளைப் பாதுகாப்பது என்பதை விட, அவர்களை நம்பிய பொட்டுக்கேட்டை, அவர்களின் தோல்வியால் ஏற்பட்ட அவமானத்தை மறைக்க, எங்களுடைய நிலைக்கான காரணங்களை ஆராயாமல் மற்றவர்களைக் குற்றஞ்சாட்டுவதன் காரணம் இதுதான்.

# மெய்தான் பாருங்கோ!

## வியர்வைகளின் ஏக்கங்கள்



கனகாலத்துக்குப் பிறகு ஒருக்காப் பூநகரிப்பக்கம் போய் வந்தனான் பாருங்கோ. என்ர சகலன் ஒருத்தன் அங்கையிருக்கிறான். ஆள் நல்ல பிரயாசைக்காரன். எந்தநேரமும் வயல், தோட்டம், ஆடுகள், மாடுகள் எண்டு அதுகளோடைதான் திரிவான். வீட்டுமாலுக்கை இருப்புக் குறையாத நெல்லுமூடைகளோடை சுதந்திரமான மனிசனாத் திரிஞ்சவன். பிள்ளையளுக்கும் ஒரு குறைவில்லாமல் சடங்கு சம்பிரதாயங்களைச் செய்து குடுத்திட்டு கடைசி மகள், மருமோனோடை இருந்தவன். மருமோன்பொடியனும் நல்ல உழைப்பாளி. ஒற்றுமையாய் சந்தோஷமாய் சீவிச்ச குடும்பம்... இன்டைக்கு அதுகள் இருக்கிற நிலை...?

கடவுளே! உந்தச் சண்டையொண்டு வராட்டி எவ்வளவு சந்தோஷமாய் இருந்திருக்கும். எத்தனை பேருடைய வாழ்க்கை இன்னும் தலைநிமிர்ந்திருக்கும்...!

பஸ்சால இறங்கி அவன்ர வீட்டைத் தேடிப்பிடிக்கக் கஷ்டமாப் போச்சுது. ஏனெண்டால் "அவன்ரவீடு அடிமட்டத்தோடை அழிஞ்சு போய் கிடந்தது. ஏதோ தடி, தண்டு கம்புகளை நட்டு, முகாமில குடுத்த தரப்பாளால முகடுவிழுத்தி வீடாக்கி வைச்சிருந்தான்.

எனக்கு அழுகைவந்திட்டுது. என்னமாதிரியிருந்தவன்! இப்படியாய் போயிட்டானே... படலைவாசல்ல நிண்டு கூப்பிட்டன். தரப்பாள் வீட்டுக்குள்ளயிருந்து வெளியில வந்தவனை அடையாளம் காணேலாமல் போச்சுது. பிறகு ஒருத்தரை ஒருத்தர் விசாரிச்சாப்பிறகு தான் அவன்ர முகத்தில் சிரிப்புவந்தது. கடவுளே! அதென்ன சிரிப்பே அது...?!

தரப்பாள் வீட்டுக்குள்ளயிருந்து நாங்கள் பலதும் பத்தும் கதைக்கேக்கைதான் எனக்கு கொஞ்ச நாளைக்கு முன்னம் பேப்பரில ஒரு விசயம் வாசிச்சது ஞாபகத்துக்கு வந்தது. உடன அவனிட்டை கேட்டன்.

மெய்யே! இப்ப கிட்டடியில பேப்பரில ஒரு செய்தி வாசிச்சனான். அது இஞ்சால பூநகரிப் பக்கம்தான் நடந்ததெண்டு போட்டிருந்தவை. உந்தப் பூநகரி கமநலசேவைத் திணைக்களத்தில கமகாரருக்கெண்டு வந்த உழவுகலப்பையள், மிசினுகள் எல்லாம் மழையுக்கையும், வெய்யிலத்துக்கையும் கிடந்து கறள்பிடிக்குதெண்டு படங்களோடை போட்டிருந்தவங்களல்லோ. நீ பாக்கேல்லையே?

உதுகளைப் பாத்தும்தானென்ன? கேட்டும்தானென்ன...? சகலன் வேண்டா வெறுப்பாச் சொன்னதிலயிருந்து அவன் இப்ப எவ் வளவு தூரத்துக்கு மனம் உடைஞ்சு போயிருக்கிறனான் எண்டது விளங்கிச்சுது எ்னக்கு.

அது சின்னச்சாமியண்ணை உந்தப் பூநகரி கமநலசேவைத் திணைக்களத்து எல்லைக்குள்ள 19 கமக்கார அமைப்பு இயங்குது கண்டியே. இந்த அமைப்பூடாக இஞ்சத்தேக் கமக்காரர்மாருக்கு மிசினும், கலப்பையும் குடுக்கிறதுக்கெண்டு இருந்தவையாம். கொழும்பிலயிருந்து மிசினும்,கலப்பையும் வந்து ஒரு மாசத்துக்கு மேலாகியும் அதை ஒருத்தருக்கும் குடுக்கேல்லை. இப்ப குடுத்திச் சினமோ தெரியாது.

உந்த வெய்யிலத்துக்கையும், மழையுக்கையும் கிடந்த் மிசினுகளையும்,கலப்பையளையும் நேரத்தோடு வேளாண்மை செய்யுறதுகளுக்குக் குடுத்திருந்தால், இப்ப எங்கட வயல்ல நாத்து முளைச்சிருக்கும். நம்மட சீவியப்பாடும் சந்தோஷமாக இருந் திருக்கும். முன்னம் இயக்கம் இருக்கேக்கை அவங்களோடை மாரடிச்சு முடிஞ்சுது. இப்ப உந்த அரசாங்க உத்தியோகத்தர் மாரோடை மல்லுக்கட்ட வேண்டிக்கிடக்குது.

ஒரு கலப்பையின்ர பிரயோசனம், அதின்ரபெறுமானம் எப்படிப்பட்டதெண்டு வயலுக்கை வேர்வை சிந்துற கமக்காரனுக்குத்தான் தெரியுமேயொழிய, தாங்கள் கனக்கப் படிச்ச ஆக்கள் எண்டு நினைக்கிற காற்சட்டைபோட்ட உத்தியோத்தர் மாருக்குத் தெரியாது கண்டியே!

உங்கை கொழும்பிலயிருந்து எத்தனை பெரியாக்கள் வந்து போகினம். அவையளுக்கு உதுகளைப் பற்றிச் சொல்ல ஒரு ஆட்களுமில்லையே? அறிக்கையளுமில்லையே? இப்ப வெளிச்சத்துக்கு வந்தது உதொண்டுதான். உதைப்போல இன்னும் எத்தனை சாமான்சக்கட்டுகள் மீளக்குடியேறினதுகளுக்கெண்டு வந்ததுகள் எல்லாம், உவையளின்ர அசண்டையீனங்களால பூஞ்சணம்புடிச்சு, புழுத்து நாறிக்கிடக்குதோ ஆர்கண்டது? கலப்பையளும், மிசினுகளும் வெளியில கிடந்ததால பேப்பர் காரன்ர கண்ணுக்குத் தட்டுப்பட்டுது. வேறை அரிசி, மாச்சீனி, பருப்புகளெண்டால்...?

உடுத்த உடுப்போட ஆமியிட்டை ஓடிப்போய், இப்ப மீள்குடியேற்றமெண்டு வந்திருக்கிற எங்களுக்கு என்ன கிடக்குது? ஒரு ஏக்கருக்கு மட்டும் உழவுகூலி 1500 ரூபா எண்டநிலையில எங்களால என்ன செய்ய ஏலும்?

அரசாங்கம் எங்களுக்கு ஒண்டும் தருகுதில்லையெண்டு கத்திக்குளறுறதை விட்டிட்டு, தந்த பொருளுகளை ஒழுங் காச் சனங்களிட்டை உந்த உத்தியோகத்தர்மார் குடுத்தாலல்லோ, அரசாங்கமும் பேந்தும் ஏதேனும் அனுப்பும். தான் அனுப்பின பொருள் சனத்துக்குப் போய்ச் சேரேல்லையெண்டு அரசாங்கம் அறிஞ்சாத் திரும்பவும் தருமே?

சண்டைக்கு முன்னம் சொந்தமா மிசினும், மாடுகளும், கலப்பையளும் எண்டு வைச்சிருந்த எனக்கு, இன்டைக்கு...?

அவன் தன்ர மனப்பாரத்தை இறக்கிக்கொண்டிருக்க நான் கேட்டுக்கொண்டிருந்தன் பாருங்கோ. "**கமக்காரன்**' எண்ட சொல்லுக்கு எவ்வளவு பொருத்தப்பாடாய் வாழ்ந்தவன்... போரும், புலியளின்ர போராட்டமும் வந்து இவனைப் போல மண்ணை நம்பி வாழ்ந்த ஆட்களின்ர வாழ்க்கையை எவ்வளவு தூரம் நாசமாக்கிப் போட்டுதெண்டது இன்னும் இஞ்சை எத்தனை பேருக்குப் புரிஞ்சிருக்குது? தெரிஞ்சிருக்குது?

அதுவும் உந்த உத்தியோகத்தர்மாருக்குப் புரிஞ்சிருந்தால், கமக்காரருக்கெண்டு வந்த கலப்பையும், மிசினும் உப்பிடி வெய்யிலத்துக்கை கிடந்து காயுமோ? கறள்பிடிக்குமோ?

*-சின்னக்குட்டி சின்னச்சாமி-*

# பொட்டுக்கேட்டை மறைக்க குற்றச்சாட்டை எடுத்துவிடு!

**கனடா "தாயகம்" இதழில் ஜோர்ஜ் இ.குருஷ்சேவ் எழுதிய கட்டுரையின் மறுபகுதி.**

புலன் பெயர்ந்த நாடுகளில் அரசியல் ஆய்வாளர்கள் மலிந்திருப்பது போல, எங்களுக்கு ஊரில் நிறைய குஞ்சப்புமார் இருந்தார்கள். நெருக்கமான உறவினர்கள் மட்டுமன்றி, எங்கள் தந்தைமார், பேரன்மாரின் வயதில் இருந்த பெரியோர்கள் எல்லாம் மரியாதை கருதி "குஞ்சப்பு" என்றே அழைக்கப்பட்டார் கள். எங்கள் அண்ணன்மார் வயதில் இருந்த இளவட்டங்கள் ஸ்டைலாக குஞ்சி என்று அழைத்துக் கொள்வதுடன், பீடி, வாய்க்குப் போடும் புகையிலை கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட்டிருப்பார்கள்.

வீட்டிலிருந்து புறப்பட்டால். வழியில் கண்ணில் படுகின்ற குஞ்சப்புகளுடன் பரஸ்பர குசலம் விசாரிப்பது என்பது ஒரு சம்பிரதாயமாகவே இருந்தது.

மாலையானதும் பெரும்பாலும் வெறியில் இருப்பார்கள். அடிக்கடி பக்கத்து வீட்டுக்காரரோடு சண்டைகள் நடக்கும். இல்லாவிட்டால் மனைவிமாருக்குப் போட்டு அடிப்பார்கள். வளர்ந்த பிள்ளைகள் இருந்தால் விசயம் தெரியாமல் கை வைக்கப் போய் மகன்மாரிடமும் வாங்கிக் கட்டுவார்கள்.

இவர்களைப் பற்றியெல்லாம் ஊரில் பல்வேறு நகைச்சுவைக் கதைகள் இருக்கும். இன்று கூட, எங்கள் ஊர்க்காரர்கள் சந்தித்துக் கொண்டால் இந்தக் கதைகளை சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கும் அளவுக்கு புகழ் பெற்ற கதைகள் அவை.

ஒரு குஞ்சப்பு இருந்தார். இவர் ஒருநாள் மாலை, ஆட்டுக்கு குழை பிடுங்க மரத்தில் ஏறியிருக்கிறார். மாலை நேரம் என்றாலேயே, குஞ்சப்பு மரணவெறியில் நிற்பவர். றோட்டால் நடந்து போகும் போது கூட, கிடுகுவேலியைப் பிடித்துக் கொண்டு கிழுவ மரத்தோடு வாக்குவாதப்பட்டுக் கொண்டிருப்பவர். மரத்தில் ஏறியிருக்கிறார், "ஏறாதே ஏறாதே என் கணவா" என்ற மனைவியின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல். தனக்கு எல்லாம் தெரிந்த மாதிரி மனைவிக்கும் தூசணத்தால் பேச்சுக் கொடுத்து குஞ்சப்பு மரத்தில் ஏறியிருக்கிறார்.

பிறகென்ன? குழந்தைப் பிள்ளைக்கும் தெரிந்த மாதிரி, குஞ்சப்பு மரத்திலிருந்து விழுந்து விட்டார். "இந்த குறுக்கால போனவனால மனிசர் நிம்மதியாக இருக்கேலாது" என்று மனைவி அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வருகிறார். அருகில் பொதுக்கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தவர்கள் ஓடி வருகிறார்கள். கூக்குரல் கேட்டு நீண்ட தூரங்களில் இருந்தும் ஓடி வருகிறார்கள். ஊரே திரண்டு வந்தது என்பது போல.

நல்ல காலம். தென்னை மரம் என்றால், நேரடியாக வந்து விழுந்து குஞ்சப்பு முடிந்திருப்பார். அல்லது முள்ளந்தண்டு, கை, கால் முறிந்திருக்கும். இது கொப்புள்ள மரம். நேரடியாக விழாமல், கொப்புகளில் எல்லாம் அடிபட்டு உள்காயங்களோடு கீழே விழுந்து கிடக்கிறார். சுற்றி வர நிற்பவர்கள் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவதா? இல்லை, புக்கை கட்ட ஒட்டகப்புலத்துக்கு கொண்டு போவதா? என்று ஓடுப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பேச்சு மூச்சில்லாமல் கிடந்த குஞ்சப்பு கண்ணைத் திறந்து பார்க்கிறார்.

அடிபட்டு நொந்து எழும்ப முடியாமல் கிடப்பது குஞ்சப்புவிற்கு பிரச்சினை இல்லை. அவருடைய பிரச்சினை கெளரவப் பிரச்சினை. தன்னுடைய பிழையை, குடிவெறியில் மரத்தில் ஏறிய தன்னுடைய மடத்தனத்தை ஏற்றுக்கொள்ள முடியாத கெளரவப் பிரச்சினை. மற்றவர்கள் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்ற பிரச்சினை. பெரிசுகள் எல்லாம் "என்ன மட வேலைத் தனீ?" என்று தன் முட்டாள்தனத்தை திட்டும் என்ற வெட்கம்.

இந்த அவமானத்தை மூடி மறைத்து, விலாசம் காட்டும் முயற்சியில்... கண்ணைத் திறந்து குஞ்சப்பு சொன்னார்....

விளையாட்டுத் தெரிஞ்சபடியால் தப்பியிட்டன். குஞ்சப்பு விளையாட்டு என்று சொன்னது, சீனடி, சிலம்படி, கம்பு விளையாட்டுக்கள். குஞ்சப்புவிற்கு அப்படி ஒரு விளையாட்டும் தெரியாது. தன்னுடைய பிழையை மறைக்க, எடுத்து விட்ட கயிறு அது. பின்னால் நாலைந்து மாதமாய் குஞ்சப்பு நெஞ்சில் புக்கை கட்டியபடி அலைந்தார்.

மரணம் இல்லாத வீட்டில் கடுகு வாங்கிக் கொண்டு வரச் சொன்ன புத்தர் கதைபோல இலங்கையில் வாழுகின்ற ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒரு வகையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறான். பொருளாதார ரீதியாகவோ, உறவுகளை இழந்தோ...

இதை விட முக்கியமாக, இலங்கை அரசியலில் தமிழர்கள் தலைநிமிர்ந்து தங்கள் உரிமைகளைக் கேட்க முடியாதபடிக்கு நட்டாற்றில் கொண்டு வந்து தலை குனிய விட்டுப் போயிருக்கிறார்கள். தமிழர் அரசியல், யூதர்கள் நாற்பது வருட காலம் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தது போல, திக்குத்திசை தெரியாமல் போக்கிடம் தெரியாமல் எதிர்காலம் அரசியல் கருந்துளைக்குள் சிக்கிக் கொண்டிருக்கிறது.

ஆனால், உண்மை நிலையையும் எங்கள் தவறுகளையும் ஏற்றுக்கொள்ள மறுத்து, வரட்டுக் கெளரவப் பிரச்சினையாக.... குஞ்சப்பு போல... விளையாட்டுத் தெரிஞ்சபடியால் தப்பியிட்டம் என்று எங்களை நாங்களே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். இன்னமும் இன்றைய தங்கள் நிலைக்கு காரணம் என்ன என்பதை விளங்கிக் கொள்ளும் அளவுக்கு விபரமும் இல்லை, துணிச்சலும் இல்லை. இன்னமும் இவர்கள் ஒரு முழு அளவிலான உளவிசாரணைக்கு, soul searching, எங்கள் மாற்றுக்கருத்து நண்பர்களின் பாசையில் சொல்வதாயின், சுயவிமர்சனத்துக்குத் தயாராக இல்லை.

ஆங்காங்கே குசுகுசுக்கிறார்கள், பொருமுகிறார்கள், முணுமுணுக்கிறார்கள். யாரும் முழுமையாக இந்த இழிவு நிலையின் அடிமுடியைத் தெரிந்து கொள்ளத் தயாராக இல்லை.

புதினப்பலகையில் ஒரு கட்டுரை வருகிறது... புலன்பெயர் ஊடகங்கள் எல்லாம் புலிகளின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதற்காக இயங்கினவே தவிர, தமிழ்மக்களின் நலன் சார்ந்து அல்ல. புதிய கண்டுபிடிப்பு!

கனடிய வானொலி அறிவிப்பாளர் ஒருவர் கட்டுரை எழுதுகிறார்... கனடாவில் மக்களின் சொத்துக்கள் தனியார்களின் கையில் உள்ளன.

அதாவது




புலிகளின் சொத்துக்கள் பினாமிகளின் கையில் உள்ளன. இன்னொரு மகத்தான கண்டுபிடிப்பு.

என்னால், இன்னமும் கண்டுபிடிக்க முடியாத ஒரு உண்மை இருக்கிறது. இந்த மக்கள் என்று சொல்லப் படுபவர்கள் யார்? மக்களிடம் சொத்துக்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றால் யாரிடம் திருப்பிக் கொடுப்பது?

எங்கள் ஊரில் ரயில் என்ஜின் ராசையா அண்ணை என்று ஒருவர் இருந்தார். சித்த சுவாதீனம் இழந்தவர். இவர் ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர் போலவே உடுத்தியிருப்பார். தன்னை ஒரு ரயில் சாரதியாகவே நினைத்துக் கதை சொல்லிக் கொண்டிருப்பார். ஒரு தடவை தண்டவாளத்தில் படுத்திருந்த யானையை தான் எப்படி ரயிலை நிறுத்தி பின்னால் போய் பெட்டிகளை கழற்றிவிட்டு வேகமாய் வந்து அடித்துக் கொன்றார் என்பதை வர்ணித்துக் கொண்டிருந்ததை சிறுவயதில் கேட்டுக் கொண்டிருந்தேன். தான் அடித்த அடியில் நெய் சிதறிக் கிடந்தது என்றபோது நானும் விசயம் விளங்காமல் நெய் என்றால் என்ன என்று கேட்ட போது மூளை என்று சிம்பிளாய் பதில் சொன்னார்.

எங்கள் ஊரில் யாரோ இறந்த போது, பாடை கட்டி ஊர்வலமாய் கொண்டு போய் மயானத்தில் சிதையின் மேல் உடலை வைத்து இறுதிக் கிரியைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே வந்த ராசையா அண்ணை பிணத்தின் கையைத் தூக்கிப் பார்த்து விட்டுச் சொன்னார்.... "ஆள் முடிஞ்சுது"

அதாவது ஊர் முழுக்கத் தெரிந்த உண்மை அப்போது தான் ராசையா அண்ணைக்கு தெரிந்திருக்கிறது.

அதைப் போல, இருபது வருடங்களாக நாங்கள் சொல்லிக் கொண்டிருந்த உண்மை இப்போது தான் இவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

புலிகளின் ஆயுதப் போராட்டம் அழிவுக்கு வழி வகுக்கிறது. புலன் பெயர்ந்த ஊடகங்கள் புலிகளுக்கு சரியான வழியைக் காட்டாமல் சீரழிக்கின்றன. போராட்டத்திற்காக சேர்த்த பணத்தை பலர் கையாடுகிறார்கள். இத்தனை வருடங்களாக இதை நாங்கள் சொல்லிக் கொண்டிருந்த போது எங்களைத் துரோகிகள் என்று தூற்றியவர்கள் இன்று ராசையா அண்ணையைப் போல இந்த உண்மையைக் கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இருபது வருடங்களுக்கு முன் தாயகத்தில் எழுதியிருக்கிறேன்... யாழ்ப்பாணத்து பிராங்கென்ஸ்டைன் பற்றி. யாழ்ப்பாணம் ஒரு பிராங்கென்ஸ்டைன் மிருகத்தை உருவாக்குகிறது. அது தன்னை உருவாக்கியவர்களையும் அழித்து, தன்னையும் கடைசியில் அழிக்கும் என்று. "பட்டுத்துகிலுக்கு ஆசைப்பட்டு கோவணத்தையும் இழக்கப் போகிறோம்", "நாயர் பிடித்த புலிவால்" தமிழர்களை அழிக்கப் போகிறது என்றெல்லாம் ஏடு இட்டோர் இயலில் எழுதியிருந்தேன்.

தேசியத் தலைவர் மாதிரி நான் ஒரு தீர்க்கதரிசி இல்லை. ஆனால் என் சிற்றறிவுக்கு இந்த உண்மைகள் அப்போதே தெரிந்திருந்தன.

இவர்களுக்கு இப்போது தான் எல்லாம் ஓடி வெளிச்சிருக்கிறது, ரயில் என்ஜின் ராசையா அண்ணை போல.

முழுமையாக இந்த அழிவுக்கான காரணத்தை இன்னமும் அறிந்து கொள்வதில் இவர்களுக்கு விருப்பம் இல்லை.

அதுவும் எங்கள் யாழ்ப்பாணப் புத்தி தான். உங்களுக்குத் தெரியும். அங்கே ஒவ்வொரு ஊரிலும் பல வீடுகளில் பல இரகசியங்கள், பரகசியங்கள் இருக்கும். எல்லாருக்கும் தெரிந்தது. யாருமே அதைப் பற்றி பேசமாட்டார்கள். எங்கட பொட்டுக் கேட்டை நாங்கள் வெளியில காட்டக் கூடாது. இது யாழ்ப்பாணத்தின் எழுதப்படாத விதி. எங்கட பல்லைக் குத்தி மற்றவனுக்கு மணக்கக் குடுக்கக் கூடாது. இது என் காதுபடக் கேட்ட திருவாசகம்.

சிறுவர்களான எங்களுக்கு இதில் பல விடயங்கள் தெரியாது. வேலிச் சண்டை வரும். கிணற்றடிச் சண்டை வரும். அப்போதுதான் யார் யாரோடு படுத்தது? யார் யாருக்குப் பிள்ளை பெற்றது? யார் யாருடைய பிள்ளையை அழித்தது? எல்லா விபரங்களும் வானலையில் தவழ்ந்து வரும்.

எங்களுக்குக் காலங்காலமாய் கற்பிக்கப்பட்டது இதுதான், பொட்டுக் கேடுகளை மூடிமறை!


இன்றைய அழிவுக்கான காரணம் என்ன? அதன் சூத்திரதாரிகள் யார்? என்பதெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதைப் பகிரங்கமாகப் பேசுவதற்கு நாங்கள் தயார் இல்லை. காரணம், எங்கள் பொட்டுக் கேடுகள் அம்பலமாகி விடும்.

இதனால்தான் இன்றுவரைக்கும் தேசியம், புனிதப் போராளிகள், மாவீரர்கள் என்று புலுடா விட்டுக் கொண்டிருக்கிறோம். அதைப் பேச விரும்புகிறவர்களையும் இன உணர்வைக் காட்டி ஒரு குற்ற உணர்வுக்குள்ளாக்கி, அதைக் கதைக்கிறது எத்தனை பேருடைய வாழ்க்கையைப் பழுதாக்கிப் போடும் என்று பயமுறுத்தி மூடி மறைத்துக் கொண்டிருக்கிறோம்.

இதையெல்லாம் விசாரிக்கப் புறப்பட்டால், எங்களுடைய தவறுகள் அம்பலமாகி நாங்கள் தான் குற்றவாளிகள் என்று முடிந்து விடும். இதனால் கதையை மாற்றி குஞ்சப்புவைப் போல, விளையாட்டுத் தெரிஞ்சபடி யால் தப்பியிட்டம் என்று சமாளித்துக் கொண்டிருக்கிறோம் எங்களை.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# வீடமைப்புப் பணிகள் தாமதம் "நேர்ப்" திட்டத்திற்கு நேர்ந்த கதி



(முரசுமோட்டை)
கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் நேர்ப்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற புதிய வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தாமதடைந்து காணப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2006 மற்றும் 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நேர்ப் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப் பட்ட பயனாளிகளுக்கென புதிய வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடை பெற்றுவருகின்ற நிலையில் இக் கட்டுமானப் பணிகள் இந்த வருடம் மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண் டும் என நிபந்தனை வழங்கப்பட்டது.

எனினும் இக்கட்டுமானப் பணிகள் முழுமை பெறாத நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. இது தொடர்பாக பயனாளிகளுடன் தொடர்புகொண்டு கேட்டபோது.

தங்களுக்கு வீட்டுத்திட்டத் திற்கென 3 இலட்சத்து 25 ஆயிரம ரூபா போதுமானதாக இல்லை. முழுமையாக வீட்டிற்கான கட்டு மானப் பணிகளுக்கு நான்கரை இலட்சம் நிதியினைத் தங்களால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ள தாகவும், இதனால் திட்டத்திற் கென வழங்கப்பட்ட நிதியினைக் கொண்டு கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதால் தாமதம் ஏற்படு வதாகத் தெரிவிக்கின்றனர்.(110)

# மட்டக்களப்பில் பனம் கைப்பணிப் பயிற்சி

(மட்டக்களப்பு)
பனை அபிவிருத்திச் சபையி னால் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறைக்கைதிகளுக்குப் பயிற்சிய ளிக்கும் நோக்கில் மட்டக்களப்பு நகரில் பனம் கைப்பணிப் பயிற்சி நிலையம் ஒன்று. கடந்த வாரம் மட்டக்களப்பு சிறைச்சாலை உத் தியோகத்தர் கே.பண்டாராவால் வைபவ ரீதியாக திறந்து வைக் கப்பட்டது.

இந்நிகழ்வில் பனை அபிவி ருத்திச் சபையின் தலைவர். பசு பதி - சீவரத்தினம் பிரதம விருந் தினராகக் கலந்துகொண்டு சிறப் புரை நிகழ்த்தினார். இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பனை அபி விருத்திச் சபையின் பணிப்பாளர கள், இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.


அன்றைய தினம் மட்டக்க ளப்பு பூனச்சிமுனை என்னும் இடத்தில் மேலுமொரு பனம் கைப பணிப் பயிற்சி நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. இப் பயிற்சி நிலையத்தில் 25 பெண் கள் பயிற்சிபெற்று வருகின்றனர். இந்நிலையத்தை வைபவ ரீதியா கப் பாடசாலை அதிபர் ஏ.டீ.ரசூல் வைபவரீதியாகத் திறந்துவைத் தார். இந்நிகழ்விலும் பனை அபி விருத்திச் சபையின் பணிப்பா ளர்கள், இணைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (08)

# விசேட பொதுக்கூட்டம்

(ஊர்காவற்துறை)
வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச விசேட பொதுக கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி க்கு சமாசத் தலைவர் த.சிவலிங் கம் தலைமையில் சமாச மண்ட பத்தில் நடைபெறவுள்ளது இக்கூட் டத்திற்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவி ருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதனும், கௌரவ விருந்தினராக வடமா காண பனை தென்னைவள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாச முன்னாள் தலைவர் தி.அமிர்தநாதனும், சிறப்பு விருந் தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டு றவு அலுவலர் த.பத்மானந்தன், தலைமைக் காரியாலய கூட்டு றவுப் பரிசோதகர் இ.விஜயமோ கனராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (27)

# கனேடிய நாடாளுமன்றில் தமிழில் ஒலித்த கன்னி உரை

## தமிழுக்கு பெருமை சேர்த்தார் ராதிகா



(கொழும்பு)
முதல்முறையாக கனேடிய நாடாளுமன்றிற்குத் தெரிவு செய் யப்பட்ட இலங்கைத் தமிழ் பெண் ராதிகா சிற்சபைஈசன் தனது முத லாவது பாராளுமன்ற கன்னி உரையை தமிழ் மொழியிலும் நிகழ்த்தியுள்ளார்.

அவர் தனது உரையில், அடுத்து கனேடிய நாடாளுமன் றத்தின் முதன்முதலாவது தமிழ் உறுப்பினர் என்ற வகையிலேயே இந்த மதிப்பிற்குரிய அவையி லேயே எனது தாய் மொழியில் பேச முடிவதையிட்டு ஒருங்கே பெரு மையாகவும் எளிமையாகவும் உணர்கிறேன். தமிழர்களாகிய நாம் பெரும்பாலும் ஒடுக்குமுறை களிலிருந்தும் போர்ச் சூழலில் இருந்தும் தப்பித்தே கனடாவிற்கு வந்திருக்கிறோம்.

கனடா எங்களை இருகரம் கொண்டு அரவணைத்தது. நாமும இந்தப் பெருநாட்டின் பொருளா தார வளர்ச்சிக்கும் பண்பாட்டு வளத் திற்கும் முனைப்போடு பங்க ளித்து வருகிறோம். இன்று இந்த அவையிலே தமிழ் பேசப்பட்டதை அப்படி ஒரு மைல்கல் எம்மால் எட்டப்பட்டதை அறிந்து ஸ்காப் ரோ ரூஸ் ரிவரிலும் டொரொண் டோ பெரும்பாகத்திலும் ஏன் உல கெங்குமே பரந்து வாழும் புலம் பெயர் தமிழர்கள் நிச்சயமாக பெருமையடைவார்கள்.

கனடாவில் எமது சமூகத்தின் வளர்ச்சியின் அடுத்த படி இது. தமிழர்களின் பிள்ளைகள் எதிர்நோக்கும் தடைகள் தகரும் அவர்கள் கனடாவின் உயர் தலைமை பொறுப்புக்களை நோக்கி முன்னேறுவார்கள் என்று உரையாற்றினார்.

# வீட்டுத்தோட்டப் போட்டிகள் இம்முறை கிளிநொச்சியிலும்

மாகாண குறித்தொதுக் கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் கிளிநொச்சி மாவட்ட விவ சாய விரிவாக்கல் அலுவலகத் தினால் கிளிநொச்சியில் இவ் வாண்டிற்கான வீட்டுத்தோட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

இதில் கிராம வீட்டுத்தோட்டம், மாணவர் வீட்டுத்தோட்டம், அலுவலக வீட்டுத்தோட்டம், அலு வலர்களுக்கான வீட்டுத்தோட்டம், பாடசாலை வீட்டுத்தோட்டம் என ஐந்துவகையாகப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக நடத்தப்படும் இப் போட்டியில் ஒவ்வொரு வகை யான வீட்டுத்தோட்டப் போட்டி யில் தனித்தனியாக முதலிடத் தைப் பெறுகின்ற போட்டியா ளர்கள் மாவட்ட மட்டப்போட்டி களில் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட ஒவ்வொரு வகை யான வீட்டுத்தோட்டப் போட்டி களில் தனித்தனியாக முதல் மூன்று இடங்களைப் பெறுபவர் களுக்கு பெறுமதியான பரிசில் கள் வழங்கப்படவுள்ளது. மேற்படி போட்டியில் கலந்துகொள்ள ஆர் வமுள்ளவர்கள் எதிரவரும் 30 ஆம திகதிக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்கல் அலுவ லகத்துடனோ அல்லது விவசாய போதனாசிரியரிடமோ தொடர்பு கொள்ளவும். (110)

# அழகான யாழ்.நகர்

யாழ். நகரிலுள்ள உள்ள வீதி சுற்று வட்டங்களை அழகுபடுத்தும் வகையிலும் வர்த்தக மையப்பகு தியில் குப்பை சேகரிக்கும் கொள் கலன்களை வைப்பதற்கும் தேவை யான கொள்கலன்களை வழங்கு வதற்கு விருப்பம் உள்ளவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளலா மென யாழ்.மாநகரசபை முதல்வர் அறிவித்துள்ளார்.

---

### யாழ்.சிறையில்...

நடவடிக்கை எடுத்தனர். இதற் கமைய அவர்கள் எதிர்வரும் 16ஆம் திகதி வரை யாழ்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

---

### நிலைத்திருக்கும்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது வட க்கு கிழக்கில் போரினால் பாதிக் கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகள், வடக்கு கிழக்கு காணி, வணக்கஸ் தலங்கள், கலாச்சார நிலங்கள் தொடர்பாகவும், எல் லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வு தொடர்பா கவும் விரிவாக கலந்துரையா டப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரி வித்தன.

# புதிய கட்டடத் திறப்புவிழா

(சித்தங்கேணி)
சித்தங்கேணி சுப்றா கல்வி நிறுவனத்தின் புதிய கட்டடத்திற ப்புவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 7.00 மணியள வில் நடைபெறவுள்ளது. சித்தங் கேணி சிவசிதம்பரேஸ்வரப் பெருமானின் 3 ஆம் வீதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிறு வனத்தின் திறப்பு விழா ஆல யக் குருக்கள் குரு சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் தலைமை யில் இடம்பெறவுள்ளது.

# அனலைதீவு தபாலகத்திற்கு புதிய கட்டடம் வேண்டும்

## மக்களின் கோரிக்கை எப்போது நிறைவேறும்

(ஊர்காவற்துறை)
அனலைதீவு தபால் நிலையம் பல வருடங்களாக நிரந்தரக் கட்டடம் இன்றி தனியார் கட்டடத் தில் இயங்கிவருகின்றது.

அனலைதீவுப் பகுதிக்கான தபால் நிலையம் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாகத் தனி யார் வாடகைக் கட்டடத்தில் இய ங்கிவருகின்றபோதும் அதற்கான நிரந்தர தபால் நிலையக் கட்ட டத்தினை அமைப்பதற்கான முயற்சிகள் சம்பந்தப்பட்ட திணைக் களங்களால் மேற்கொள்ளப படவில்லை.

தற்போதைய நிலையில் நவீன வசதிகளுடன் அமைந்த தபால் சேவையினை வழங்கக் கூடிய வகையில் தற்போதைய தனியார் கட்டடம் அமைந்து காணப்படவில்லை என்பதோடு மேற்படி தனியார் வீட்டில் இருந்து தபால் நிலையத்தினை இடம் மாற்ற வேண்டிய தேவைகள் எழும் பட்சத்தில் தபால் நிலை யத்தை உடன் இடமாற்றம் செய் வதற்கு வேறு வசதியான கட்ட டம் இல்லாத நிலையில் அத் தபால் நிலையத்திற்கான தனி யான கட்டட நிர்மானத்தை மேற் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

மேலும் தற்போதைய கட்டடம் பழமையான வீடு என்பதோடு கடந்த முப்பது வருடமாகத் திரு த்த வேலைகள் செய்யப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த வகையில் அன்லைதீவு பகுதிக்குத் தனியான தபால் நிலையத்தினை உருவாக்கி மக் களுக்கான சிறப்பான சேவை யினை வழங்கவேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்றது. (27)



# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இந்தியா அதில் தலையிடாது!



(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இந்தியா தலையிடாது எனவும் அது இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த விடயம் எனவும் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய அரசாங்கத்தின் உயர்மட்டத் தூதுக்குழு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் வெளிவிவகார செயலர் நிருபமா ராவ், தேசிய பாதுகாப்பு ஆலேசாகர் சிவ்சங்கர் மேனன், பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார் ஆகியோரடங்கிய இந்திய தூதுக்குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்க் கட்சிகளுடனான கலந்துரையாடலின் போது வடபகுதியில் இராணுவ மயப்படுத்தப்படுதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடல்கள் தொடர்பாக இந்திய ஊடகங்களிடம் சிவ்சங்கர் மேனன் கூறுகையில், இறுதிக்கட்ட யுத்தத்தின்போது காணாமல் போனோர் தொடர்பான தகவல்களை வழங்குவதும் வடக்கில் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துமே உடனடி இலக்காகும் எனக்கூறினார்.

இதேவேளை, மீள்குடியேற்ற விடயத்தில் பணிகள் நடைபெறுகின்றபோதிலும் இன்னும் செய்யப்பட வேண்டியவேலைகள் அதிகம் இருப்பதாக சிவ்சங்கர் மேனன் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய உயர்மட்டக் குழுவினருடனான சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. சுமார் இரு மணி நேரம் சுமுகமான முறையில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், இந்திய பாதுகாப்புச் செயலாளர் பிரதீப் குமார், இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவ் ஆகியோருடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா மற்றும் வெளி விவகாரச் செயலாளர் கருணா திலக அமுனுகம ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இந்தியர்களே அதிகம்

(கொழும்பு)

வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டவர்களில் இந்திய சுற்றுலாப் பயணிகளின் தொகையே அதிகம்.

இவ்வருடத்தின் முதல் 5 மாதங்களில் மாத்திரம் 68,830 இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளதாகவும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 54.5 சதவீத வளர்ச்சியை இது காட்டுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மொத்தமாக 650,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

# "இலங்கைக்கு நன்றி" பாகிஸ்தான் கூறுகிறது



(கொழும்பு)

1971 இல் இந்தியாவுக்கு எதிரான போரில் பாகிஸ்தானுக்கு எல்லாவிதமான உதவிகளையும் வழங்கியதற்காக இலங்கைக்கு பாகிஸ்தான் நன்றி தெரிவித்துள்ளது. இந்தியாவின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று கொழும்பில் தங்கியிருந்த போதே பாகிஸ்தான் இவ்வாறு நன்றி கூறியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற இலங்கை - பாகிஸ்தான் வர்த்தக சபையின் கூட்டத்தில் பேசிய போதே, இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் சீமா இலாகி பலோச் இவ்வாறு நன்றி கூறியுள்ளார். இந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது,

நாங்கள் இலங்கையை நம்புகிறோம். இலங்கை தனது இறைமை விடயத்தில் விட்டுக் கொடுக்காமல் இருப்பதையிட்டு பெருமை கொள்கிறோம். எமது பிரதேசத்தில் நிலையான அமைதி ஏற்பட வேண்டும் என்பதை புரிந்து கொள்கிறோம். காஷ்மீர் விவகாரம் ஐ.நா. பிரகடனங்களின அடிப்படையிலும், அங்குள்ள மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலும் அமைதியாகத் தீர்க்கப்பட வேண்டும்.

1971 இல் இந்தியாவுக்கு எதிரான போரின்போது இலங்கைக்கு செய்த உதவிகளை ஒருபோதும் மறக்க முடியாது. பாகிஸ்தானில் இருந்து எம்மால் விநியோகங்கள் மற்று‍ அரசியல் உதவியை வழங்க முடியாத போது இலங்கை உதவ முன்வந்தது. தனது எரிபொருள் நிரப்பும் வதிகளை எமக்காகத் திறந்து விட்டது. இலங்கையை மக்களின் அமைதியான வாழ்வுக்கு உதவ பாகிஸ்தான் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# தெல்லிப்பளையில் வாழ்வாதார மேம்பாடு

## கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் ஏற்பாடு


(கட்டுவன்)

கால்நடை அபிவிருத்தித் திணைக்களத்தினால் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 மாடுகள் வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு 8 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகளும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் ஆடு மற்றும் மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள குடும்பங்களுக்கு கடன் அடிப்படையிலும் கால்நடைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் 4 அல்லது 5 மாடுகளை வைத்திருக்கும் குடும்பங்களுக்கு கொட்டகைகளை அமைப்பதற்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் உதவித் தொகையை வழங்குவதற்கு அனுமதி கிடைத்ததுடன் வழங்கப்படவுள்ளதாக திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (22)

# வன்னியில் கசிப்பு உற்பத்தி தாராளம் விடாது தொடரும் சட்ட நடவடிக்கை



(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் கசிப்பை வைத்திருந்த இருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதில் கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதியில் 194 போத்தல் கசிப்பினை தன்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் அக்கராயன்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஒருவரும், இரத்தினபுரம் பகுதியில் 15 லீற்றர் கசிப்பினை வைத்திருந்த குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ஒருவரும் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

நீதிமன்ற நீதிபதி தே.சிவகுமார் வழக்கை விசாரித்த போது, குறித்த குற்றவாளிகள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அக்கராயன் பகுதியைச் சேர்ந்த குற்றவாளிக்கு ஒரு லட்சம் ரூபா தண்டப்பணமாக அறவிட்டதுடன், பணத்தைச் செலுத்தத் தவறின் 6 மாதகால சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் இரத்தினபுரம் பகுதியைச் சேர்ந்த குற்றவாளிக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிட்டதுடன், செலுத்தத் தவறின் 4 மாதகால சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்தார். (110)

# மாற்று வலுவுள்ளோருக்கான விசேட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 24 ஆவது ஆண்டு நிறைவு விழா அடுத்த மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு மாற்றுவலுவுள்ளோருக்கான முச்சக்கர (மூன்று சில்லு) கதிரை ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்டம் என்பவற்றுடன், ஜெய்ப்பூர் நிறுவன ஊழியர்கள் மற்றும் பயனாளிகள் இணைந்து வழங்கும் நாடகம், பயனாளிகளின் இசை, நடன நிகழ்ச்சிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளதுடன், நிறுவனத் தயாரிப்புகளைக் கொண்ட கண்காட்சி, விழிப்புணர்வுக் குறுந்திரைப்படக் காட்சி என்பனவும் நடத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வுகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த விரும்பும் மாற்றுவலுவுள்ளோர் இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு ஜெய்ப்பூர் நிறுவன முகாமைத்துவக் குழு அறிவித்துள்ளது.

# அரசியல் யாப்புக்கு அப்பால் அரசு செயற்பட முடியாது

## நெருப்பெடுக்கிறது ஐ.தே.கட்சி



(கொழும்பு)

அரசாங்கம் கூறும் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் எனப்படும் தீர்வு என்ன என்பது தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சிக்கு புதிய சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் என்ன என்பதை அரசாங்கம் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கேட்டுள்ளார்.

அத்துடன் 13 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தைக்கூட உள்ளபடியே செயற்படுத்த அரசாங்கத்திற்கு இயலாது போயுள்ள நிலையில், அதற்கு அப்பால் என்ன என்பதை அரசு வெளிப்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அஸ்கிரிய மகாநாயக்க தேரரை நேற்றுச் சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசியல் யாப்புக்கு ஏற்றவாறு நாடு ஆட்சி செய்யப்பட வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டே இராணுவத்தினர் உயிர் தியாகம் செய்து தீவிரவாதத்தை ஒழித்ததாக திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா அல்லது வேறு வெளிநாட்டு அழுத்தங்களுக்கு மத்தியில் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் சென்று தீர்வு திட்டம் முன்வைக்கப்படுமாயின் அது அரசியல் யாப்பிற்கு உட்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மைதானம் விசமிகளால் சேதம்



(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு விநாயகர் விளையாட்டுக்கழக மைதானம் விசமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு விசமிகளினால் மைதானத்தின் ஆடுகளப் பகுதி மண்வெட்டியினால் வெட்டப்பட்டு சேதமாக்கப்பட்டதுடன், பழைய போத்தல் ஓடுகளும் உடைக்கப்பட்டு ஆடுகளப் பகுதியில் வீசப்பட்டுள்ளது. அண்மையில் ஆடுகளம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தககதாகும். இச்சம்பவத்துடன் மூன்றாவது தடவையாக மைதானம் சேதமாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூன் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.